# பயங்கரவாதிகள் பற்றி தகவல் கொடுத்தால்

Registe... News paper in ...eylon விலை சதம் 15

ஈழநாடு சந்தா
தினப் பதிப்பு
மூன்று மாதம் — ரூ. 18-00
ஆறு மாதம் — ரூ. 34-00
ஒரு வருடம் ரூ. 66-00

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் 49
போன்: 389

மலர் 11
இதழ்: 350
தேசிய தினசரி

ஈழநாடு சந்தா
வாரப் பதிப்பு
மூன்று மாதம் — ரூ. 4-00
ஆறு மாதம் — ரூ. 7-50
ஒரு வருடம் — ரூ. 14-00
முற்பணம் கட்ட வேண்டும்
தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்.

யாழ்ப்பாணம் தை 16 ஜுலகஃ 20 வியாழக்கிழமை [29-1-70]

# பரிசு ரூ. 5000

## சிறையிலிருந்து தப்பியவர்கள்

கோட்டை, புதன்

பயங்கர குற்றவாளிகள் சிறையிலிருந்து தப்பியிருக்கிறார்கள். இவர்களைக் கண்டு பிடித்து அறிவிப்பவர்களுக்கு சன்மானம் அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

திங்களன்று காலையில் மகாரை சிறைச்சாலையிலிருந்து தப்பி ஓடிய இரு பயங்கர கைதிகளைக் கைது செய்வதற்கான துப்பு கொடுப்பவர்களுக்கு ரூ. 5 000 சன்மானம் வழங்கப்படும் என்று பொலிஸ் அதிபர் திரு அலரிக் அபயகுணவர்தன அறிவித்திருக்கிறார்.

இந்த இரு நபர்களில் ஒருவர் கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்தில் களவு போன பத்து லட்சம்ரூபாய் சம்பந்தமான வழக்கில் 20 வருட சிறைத்தண்டனை பெற்ற ஜி. சிறிசேன என்றழைக்கப்படும் குலசேகர அல்லது பியதாஸ என்பவரும் 10 வருட சிறைத்தண்டனை அனுபவிக்கும் பியத்திலேக்க பெரேரா என்பவருமாகும். இவர்கள் இருவரையும் பொலிசார் நாடுமுழுவதும் தேடிவருகிறார்கள். மிகவும் பயங்கரவாதிகள் என்று கருதப்படும் இந்த இருவரையும் தேடுவதற்கு விசேஷ பொலிஸ்படையொன்றை ஐ ஜி பி நிறுவியிருக்கிறார். தப்பிச் சென்றுள்ள இந்தப் பயங்கரக்கைதிகள் இதற்குள் ஆயுதங்களைக் கூட வைத்திருக்கக்கூடும் என்று பொலிசார் கருதுகிறார்கள்.

இவர்களுடன் தப்பியோடுவதற்கு முயற்சி செய்த இன்னொரு நபரைப் பொலிசார் பிடித்துவைத்திருக்கிறார்கள். இவர் கேகாலையில் புத்தர் சிலையொன்றைத் திருடியகுற்றத்திற்காக தண்டனை பெற்ற செல்லா என்பவர் மகாரை சிறைச்சாலையின் அருகில் புதர்ஒன்றில் ஒளித்திருக்கும்போது இவர் கைதுசெய்யப்பட்டார்.

இதுசம்பந்தமாக ஒரு ஜெய்லரையும் காவலாளியையும் சிறைப்பகுதி ஆணையாளர் வேலைநீக்கம் செய்திருக்கிறார். விசாரணை நடைபெறுகிறது. இதுவரை நடந்த விசாரணைகளின்படி திட்டமிட்டு சிறையிலிருந்து தப்புவதற்கு முயற்சிநடந்திருப்பதாகவும் ஆனல் சிறைச்சாலையின் 20 அடி உயரமான மதிலைத் தாண்டுகையில் செல்லாவின் கால் முறிந்ததால அவர் மாட்டிக் கொண்டதாகவும் தெரிகின்றது. இந்த மூவரும் திங்கட்கிழமை காலையில்சிறைச்சுவரின் அருகில் ஒருவர்மேல் ஒருவர் ஏறி மதிலைக்கடந்திருப்பதாகவும் செல்லா மிகவும் உயரமானவராய் இருந்ததால் கடைசியாகக் குதிக்கையில் காலை ஒடித்துக்கொண்டதாகவும் தெரிகின்றது.

# அமைச்சர் பிரேமதாஸ இன்று யாழ். வருகிறார்

## அமோக வரவேற்பளிக்க பல இடங்களில் ஏற்பாடு

மாவிட்டபுரம், வியாழன்

இன்று யாழ். மாவட்டத்தில் 4 நாள் சுற்றுலாவை மேற்கொள்ளும் உள்ளூராட்சி அமைச்சருக்கு பலாலியில் அமோக வரவேற்பு அளிக்க ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

யாழ். மாவட்ட உள்ளூராட்சிமன்றங்களின் முன்னேற்றத் திட்டங்களைப் பார்வையிடவும் சென்ற முறை விஜயம்செய்தபோது



அமைச்சருக்கு அறிமுகம் செய்யப்படுவார்கள்.

அமைச்சரை வரவேற்பதற்காக விமானநிலையம் தேசிய கொடிகள், மகர தோரணங்கள், மலர்ச்சரங்கள் ஆகியவற்றல் அலங்கரிக்கப்பட்டுள்ளது.

விமானநிலையத்தில் இருந்துஅமைச்சர் இராஜமரியாதையுடன் அழைத்துச் செல்லப்பட்டபின் ... அரசாங்க செயலகத்தில் நிகழும் மாநாட்டில் பாராளுமன்றப் பிரதிநிதிகள், ...தவைப் பிரதிநிதிகள், உள்ளூராட்சி விவசாய, ...

### இன்றைய நிகழ்ச்சிகள்

அமைச்சர் கலந்துகொள்ளும் இன்றைய நிகழ்ச்சிகள் வருமாறு:

காலை 8 மணி காங்கேசன்துறை அதிதி மனையிலிருந்து அமைச்சர் புறப்படல். 10-00 பூநகரிக்கு வந்து சேர்தல். பூநகரி கி. சபை

## எம். பி., கல்வி அதிபதி மட்டும பாடசாலை வளர்ச்சிக்கு பொறுப்பல்ல

— சாவகச்சேரி எம். பி.

கைதடி, புதன்

ஒருபாடசாலையின் வளர்ச்சிக்கு ஒருதொகுதி உறுப்பினரோ, கல்வி அதிபதியோ காரணர் அல்லர். வளர்ச்சிக்கு ஆசிரியர்களின் திறமையும் மாணவர்களின் ஒத்துழைப்பும் பெற்றோர்களின் கண்காணிப்புமே அவசியம் தேவை. பெற்றோர் ஆசிரியர் சங்கத்தைக் கூட்டுவது மட்டுமல்லாது பாடசாலையைக் கண்காணித்து வருவதையே கடமையாகக் கொள்ளவேண்டும். இதனல் பாடசாலை வளர்ச்சி விரைவிலுண்டாகும்.'

இவ்வாறு சாவகச்சேரி ஆட்சிமன்ற உறுப்பினர் வி. என் நவரத்தினம் கைதடி சி. எம். எஸ் ஆங்கில பாடசாலை பெற்றோர் ஆசிரியர்சங்கக் கூட்டத்தில் பேசும்போது தெரிவித்தார். இச் கூட்டத்துக்குபாடசாலை அதிபர் திரு. ரி. கனகரத்தினம் தலைமைவகித்தார்.

இக்கூட்டத்தில் திரு. வி. என். நவரத்தினம், திருவாளர்கள் ஆர். செல்லையா, ரி. கனகரத்தினம், ஆர். இலங்கையர், கே. தம்பிப்பிள்ளை, கே. சதாசிவம், பி. செல்லையா, கே. தவராசா, கே. இராமேந்திரன் ஆகியோர் அடங்கிய குழு ஒன்று கல்வி அதிபதியை பேட்டிகாண வேண்டுமென்று முடிவுசெய்யப்பட்டது.

## இலங்கையி் நிர்மாணித்த

... செயல்படும்

## சாட்சியமளித்தவருக்கு பலத்த பொலிஸ் பாதுகாப்பு

தப்பியோடிய சிறைக் கைதிகள் தண்டனை பெற்ற வழக்கில் இவர்களுக்கு எதிராகச் சாட்சியமளித்தவர்களை கொலைசெய்து விடுவதாக இவர்கள் பயமுறுத்தியிருந்ததால் சாட்சியமளித்தவர்களுக்கு பலத்த பொலிஸ் பாதுகாப்பு இப்போது அளிக்கப்பட்டுள்ளது.

தப்பியோடிய சிறைக் கைதிகளினுல் இவர்களுக்கு ஆபத்து நேர்ந்துவிடுமோ என்பதனுலேய இவர்களுக்கு பலத்த பொலிஸ்பாதுகாப்பு அளிககப்பட்டுள்ளது.

## இன்று

சித்தன்கேணி, வியா.

சங்கானை நிற்சாமத்தில் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கப் பொதுக்கூட்டம் இன்று மாலை நடைபெறும். இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. என். சண்முகதாசன் பிரதம பேச்சாளராகக் கலந்து கொள்கிறார்.

### பருத்தித்துறை நகைவியாபாரி கொலை வழக்கு

## 'காக்கா, காக்கா மோதிரத்தை தா என்றதும் கொடுத்தார்'

### கொலைபற்றி முதல்தகவல்காரர் சாட்சியம்

வல்வெட்டித்துறை, புதன்

நானும் முதலாம் எதிரி இராமச்சந்திரனும் மட்டக் ...

சென்றபோது கடைக்கு வெளியே ஆட்களும், பொலிசாரும் நின்றனர். அதை பார்த்துவிட்டு திரும்பவும் ...

...னேம். அச்செலவுகள் யாவும் 1-ம் எதிரியினுடையதுதான்.

என்னையும் 1-ம் எதிரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

.என் நவரத்தினம் கைதடியப்பட்டது.

# இலங்கையில் நிர்மாணித்த முதற்கப்பல் செயல்படும்

கொழும்பு, புதன்

இலங்கையில் நிர்மாணிக்கப்பட்ட முதலாவது சரக்குக் கப்பல் இவ்வருடம் ஜூலை மாதம் தொடக்கம் இறக்குமதி ஏற்றுமதி செய்வதற்குப் பயன்படுத்தப்படும். இலங்கைக் கப்பற் கூட்டுத்தாபனத்தினரால் கட்டப்பட்ட இக்கப்பல் 15,228 தொன் எடையுள்ளதெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## திணைக்கள இடமாற்றம்

கோட்டை, புதன்

நாரஹேன்பிட்டியிலுள்ள தொழில் திணைக்கள தலைமைக்காரியாலயத்திற்கு கொழும்பு ஹேமஸ் கட்டிடத்தில் உள்ள தொழில் திணைக்களம் இடம்மாற்றப்பட்டுள்ளது.

ஏப்பிரலில்

முருகன் சிலை

# எகலியகொடைக்கு கீரிமலையிலிருந்து ஊர்வலம்

மாவிட்டபுரம், புதன்

எகலியகொடை முருகன் ஆலய திருஉருவச்சிலைகளின் ஊர்வலம் வெள்ளிக்கிழமை கீரிமலையிலிருந்து ஆரம்பமானது.

குறிஞ்சிக்குமரனுக்கு கோவில் அமைத்த எகலியகொடை இந்து வளர்ச்சிக் கழகத்தினரால் மேற்படி ஆலயத்தில் பிரதிஷ்டை செய்ய உருவாக்கப்பட்ட திருவுருவச்சிலையின் ஊர்வலம் கீரிமலை நகுலேஸ்வர தேவஸ்தானத்தில் இருந்து ஆரம்பமானது.

காஞ்சிபுரம் தொண்டைமண்டல ஆதீனம் மெய்கண்ட சந்தான குரு மகா சந்நிதானம் ஸ்ரீ ஞானப்பிரகாச சுவாமிகள் தலைமையில் இந்த ஊர்வலம் ஆரம்பமானது. ஊர்வலத்தின்போது வழியெங்கும் மக்கள் பூரண கும்பம் வைத்து வணங்கினர்



வருமாறு:

காலை 8 மணி காங்கேசன்துறை அதிதி மனையிலிருந்து அமைச்சர் புறப்படல். 10-00 பூநகரிக்கு வந்து சேர்தல். பூநகரி கி. சபை தலைவராலும் உறுப்பினர்களாலும் அளிக்கப்படும் வரவேற்பு. 11-00 பல்லவராயன்கட்டு கிராமசபைத் தலைவராலும். உறுப்பினர்களாலும் அளிக்கப்படும் வரவேற்பு. 12-30 பல்லவராயன்கட்டுக் கிராமசபை தலைவராலும் உறுப்பினர்களாலும் அளிக்கப்படும் மத்தியான போசனவிருந்து.

பிற்பகல் 1-45 கச்சாய்க்குப் புறப்படல். 3-30 கச்சாய் கிராமசபைத் தலைவராலும் உறுப்பினர்களாலும் அளிக்கப்படும் வரவேற்பு. 4-15 கைதடிக்குப் புறப்படல். 4-30 கைதடி கிராமசபைத் தலைவரையும் உறுப்பினரையும் சந்தித்தல், 5-00 கோப்பாய்கிராமசபைத் தலைவராலும் உறுப்பினர்களாலும் அளிக்கப்படும் வரவேற்பு. 5-30 நெல்லியடிக்குப் புறப்படல். 6-00 கரவெட்டியிலுள்ள அத்துளு நீர் வழங்கல் திட்டத்தைப் பார்வையிடல். 7-30 நெல்லியடியில் பொது வரவேற்பும் இராப்போசன விருந்தும். இரவு 9-00 காங்கேசனதுறைக்குப் புறப்படல். இரவு காங்கேசன்துறை அதிதிமனையில் தங்குவார்.

பார்வையிட்ட பகுதிகளின் முன்னேற்றத் திட்டங்களைப் பார்வையிடவும் உள்ளூர் ஆட்சி அமைச்சர் ஆர். பிரேமதாசா விஜயம் செய்கிறார்.

2-வது முறையாக விஜயம் செய்யும் அமைச்சருக்கு விமானநிலையத்தில் இன்று காலை 8 மணிக்கு வரவேற்பு அளிக்கப்படும்.

விமானநிலையத்தில் வந்திறங்கும் அமைச்சரை யாழ் அரசாங்க அதிபர் திரு பிரான்சிஸ் பீட்டர்ஸ், மயிலிட்டிக் கிராமசபைத் தலைவர் திரு. கு. தி. இராசதுரை, விமானநிலைய அதிபர் திரு. என். நடராசா, வலி-வடக்கு காரியாதிகாரி திரு. பி. எல். பற்றிக்ஸ், யாழ். உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. ஏ. ஏ. யோசேப் உட்பட உயர்தர அரசாங்க அதிகாரிகள், பாராளுமன்றப் பிரதிநிதிகள், உள்ளூராட்சிமன்றத் தலைவர்கள் மலர்மாலை அணிவித்து கைலாகு கொடுத்து வரவேற்பார்கள்.

அமைச்சர் வரவேற்கப்பட்டதும் யாழ். அரசாங்க அதிபரால் உள்ளூராட்சிமன்றத்தலைவர்கள் திணைக்கள அதிகாரிகள் ஆகியோர்

செல்லப்பட்டபின் [illegible]ம், அரசாங்க செயலகத்தில் நிகழும் மாநாட்டில் பாராளுமன்றப் பிரதிநிதிகள், மூதவைப் பிரதிநிதிகள், உள்ளூராட்சி விவசாய, [illegible]ப் பாசன அதிகாரிகள் க[illegible]து கொள்வார்கள்.

— —

## அமைச்சரை மயிலிட்டியும் வரவேற்கும்

மாவிட்டபுரம், புதன்

மயிலிட்டிக் கிராமசபை உள்ளூராட்சி அமைச்சர் வருகையின் பகிஷ்கரிப்பை கைவிட்டுள்ளதாக அறிவித்துள்ளது உள்ளூராட்சி அமைச்சர் விஜய நிகழ்ச்சிநிரலில் மயிலிட்டி கிராமசபைத்தலைவரின் பெயர் இடம்பெறுததால் அமைச்சரின் நிகழ்ச்சிகளை பகிஷ்கரிக்க இருப்பதாக உள்ளூராட்சி அமைச்சுக்கு கிராமசபைத் தலைவர் திரு. கு. தி. இராசதுரை கடிதம் எழுதியிருந்தார்.

இதன் பயனாக உள்ளூராட்சி அமைச்சு அதிகாரிகள் இதுபற்றி நடவடிக்கை எடுப்பதாக தலைவருக்கு விசேட தபால் அனுப்பியுள்ளதால் அமைச்சரை வரவேற்பதற்கான ஏற்பாடுகளில் கிராமசபை தற்போது ஈடுபட்டுள்ளது.

# கொலைபற்றி முதல்தகவல்காரர் சாட்சியம்

வல்வெட்டித்துறை, புதன்

நானும் முதலாம் எதிரி இராமச்சந்திரனும் மட்டக்களப்பிலிருந்து வந்தபின்னர் ஒருநாள் மந்திகை என்னுமிடத்தில் கள்ளுக் குடித்தோம். அப்போது 1-ம் எதிரி 'நகை வியாபாரியைக் கொலைசெய்தது நான் தான்' என்று என்னிடம் சொன்னார். அக்கொலைக்கு தவராசா. நடராசா உதவிசெய்தவர்கள் என்றும் சொல்லிக் கவலைப்பட்டார். இச்சம்பவத்தை அறிந்த யான் காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் சுப்ரீண்டனிடம் உடனே சென்று தெரிவித்தேன். அவர் எனது வாக்கு மூலங்களை எடுத்துக்கொண்டு திரும்ப கூப்பிடும்பொழுது வரும்படிசொல்லி அனுப்பி விட்டார்.

இவ்வாறு புலோலி தெற்கைச் சேர்ந்தவரும் பொலிசாருக்கு முதன் முதலாக கொலைபற்றி தகவல்கொடுத்தவருமான முருகேசு திருஞானசம்பந்தமூர்த்தி என்னும் 23வயதுவாலிபர் பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் சாட்சியமளிக்கையில் கூறினார்.

பருத்தித்துறை நகைவியாபாரியான எம். எம். சுல்தான் மொஹிதீன் என்பவரை அல்வாய் தெற்கைச் சேர்ந்த ச. இராமச்சந்திரன். நெல்லியடியைச் சேர்ந்த செ. நடராசா ஆகிய இருவரும் 58-ம் வருடம் கார்த்திகை மாதம் 3-ந் திகதி சதி செய்து கொலைசெய்ததாக கொழும்பு இரகசியப்பொலிசாரால் குற்றம்சாட்டி இவ்வழக்கு தொடரப்பட்டது.

திருஞானசம்பந்தமூர்த்தி தொடர்ந்து சாட்சியமளிக்கையில் கூறியதாவது: நகை வியாபாரி கொலைசெய்யப்பட்ட காலத்தில் நான் மாலிசந்தி என்னுமிடத்திலுள்ள ஜோதி ஸ்ரோசில் வேலை பார்த்தேன். வியாபாரி கொலைசெய்யப்பட்ட காலை 6 மணியளவில் நான் கடையில் நிற்கும்போது 1ம் எதிரி என்னிடம் வந்து நகைவியாபாரி கொலைசெய்யப்பட்டுவிட்டார் என்று சொன்னார். அவர் அதைச் சொல்லும்போது துப்புரவான உடை அணிந்திருந்தார். நான் இதைக்கேள்விப்பட்டு பார்ப்பதற்காக பருத்தித்துறை நகைக்கடைக்கு காலை 7மணியளவில்போய் வெளியில் நின்றுபார்த்தேன். அப்படி வெளியில்ஒருவரையும்காணவில்லை. திரும்பி மாலிசந்தி கடைகக்கு வந்துவிட்டேன். திரும்பவும் பருத்தித்துறைக்கு 9-30 மணியளவில் சென்றபோது கடைக்கு வெளியே ஆட்களும், பொலிசாரும் நின்றனர். அதை பார்த்துவிட்டு திரும்பவும் மாலிசந்திக்கு 10-30 மணியளவில்வந்தேன். அப்போது 1-ம் எதிரி கடைக்கு வந்தார் அதிகாலையில் கொலைபற்றி பருத்தித்துறையில் ஒருவருக்கும் தெரியாதிருக்க இவருக்கு எப்படித்தெரியும் என்ற சந்தேகத்தின்பேரில் 1ம் எதிரியை பார்த்து, 'நீதான் இக்கொலையைச் செய்திருக்க வேண்டும்' என்றுகேட்டேன் அவர் இல்லையென்றுமறுத்துவிட்டார். பின்னர் ஒரு மாதம் சென்றதும் 1-ம் எதிரியும், தம்பிராசா என்பவரும் என்னிடம் வந்து 1-ம் எதிரிக்கு கண்டியில் விவாகம் நடைபெறவிருக்கிறதுஎன்று கூறியதால் நாம் மூவருமாக கண்டியிலுள்ள மாகியாவா என்ற இடத்திற்குப்போனோம். அச்செலவுகள் யாவும் 1-ம் எதிரியினுடையதுதான்.

### என்னையும் 1-ம் எதிரி கொலைசெய்ய முயன்றார்

கண்டியில் வைத்து 1-ம் எதிரி சில பவுண் துண்டுகளை விற்க முயற்சித்தார். அது முடியாமல் போய்விட்டது. அங்கு வைத்து 1-ம் எதிரி என்னைக் கொலைசெய்யப் போவதாக தம்பிராசாவுக்குச் சொன்னாராம். அதை தம்பிராசா எனக்குச் சொன்னதும் நானும் தம்பிராசாவும் அவருக்குச் சொல்லாமல் யாழ்ப்பாணம் வந்துவிட்டோம். யாழ்ப்பாணம் திரும்பும்போது 1ம் எதிரி தம்பிராசாவிடம் கொடுத்திருந்த பவுண் கட்டிகளையும் யாழ்ப்பாணம் கொண்டுவந்துவிட்டோம்.

## தம்பிராசாவைக் கொலைசெய்ய 1-ம் எதிரியுடன் சென்றேன்

கண்டியிலிருந்து 1ம் எதிரி வந்தபின்னர் என்னை நெல்லியடியில்சந்தித்து தம்பிராசா என்னுடைய பவுண்கட்டிகளைக் கொண்டுவந்துவிட்டார். எங்காவதுதேடி அவனைக்கொலைசெய்யப் போகிறேன் என்று என்னிடம் சொன்னார், அதற்காக ஒரு மோட்டார் சைக்கிளும் வாங்கவேண்டும் எனச் சொன்னார். அதன்படி ஒரு மோட்டார் சைக்கிளும் வாங்கினோம் தம்பிராசாவைக் கொலை செய்வதற்காக நானும் 1-ம் எதிரியும் மோட்டார் சைக்கிளில் கண்டி. மட்டக்களப்பு. பொத்துவில். முல்லைத்தீவு, வவனியா ஆகிய இடங்கள் எல்லாம் தேடித்திரிந்தோம். அந்த நேரத்தில்தான் 1-ம் எதிரி அக்கரைப்பற்றில் வைத்து ஒரு றிவோல்வரை ஒருவரிடம் வாங்கினார். அந்த றிவோல்வரை உள் அங்கியில் ஒளித்துவைத்து யாழ்ப்பாணம் கொண்டுவந்தார்.

வேறொருநாள் நானும் 1ம் எதிரியும் பருத்தித்துறையில் படம் பார்க்கச் சென்றபோது தவராசா என்பவர் படமாளிகையில் வைத்து 1ம் எதிரி அணிந்திருந்த மோதிரத்தை பார்த்து. 'காக்கா காக்கா மோதிரத்தைக் கழற்றித் தா' எனக் கேட்டதும் 1ம் எதிரி மோதிரத்தைக் கழற்றிக்கொடுத்து பயத்தில் ஓடிவிட்டார்.

சு. தம்பிராசா சாட்சியமளிக்கையில், நகைவியாபாரி கொலைபற்றி பத்திரிகையில் பார்த்தேன். 1-ம் எதிரியை எனது ஊரான கண்டிக்குக் கூட்டிக்கொண்டு போனேன். 2 பவுண் கட்டிகளை 1-ம் எதிரி கண்டியில் வைத்து விப்பதற்கு என்னிடம் தந்தார். பவுண் கட்டியில் ஒரு துண்டைக் கண்டியில் விற்றுவிட்டு நானும் திருஞானமும் யாழ்ப்பாணம் வந்தோம். யாழ்ப்பாணத்தில் மிகுதித் துண்டுகளை விற்றபின் திருஞானத்தை வீட்டுக்கு அனுப்பிவிட்டு நான் திரும்பவும் கண்டிக்குப் போய்விட்டேன். என்றும்கூறினார்.

மேல்விசாரணை அடுத்த மாதம் 11ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

# 'நாட்டின் அபிவிருத்திக்கு இளைஞர் பங்கு அவசியம்'

—பிரதமர்

கோட்டை புதன்

தற்போது நாட்டில் நடைபெறும் அபிவிருத்தி வேலைகளுககு இளைஞர்கள் பங்கு மேலும் முன்னேற்றத்தை ஏற்படுத்த ஏதுவாக இருககுமென்று பிரதமர்திரு டட்லி சேனநாயகா இன்று நுவரெலியாவில் தெரிவித்தார்.

நாட்டின் அபிவிருத்திககு இளைஞர்கள் பெரும் பொறுப்புகளை ஏற்கவேண்டியமுககியத்துவம் ஏற்பட்டுள்ளதாகப் பிரதமர் மேலும் தெரிவித்தார்.

இங்கு பிரதமர் தேசிய இளைஞர் பேரவையைஆரம்பித்து வைத்தார்.

நாட்டின் அபிவிருத்தியை அதிகரிகக இளைஞர் பங்கு பெரிதும் உதவுமென்றும் பிரதமர் தெரிவித்தார்.

கொத்மலைககும் பிரதமர் இன்றுவிஜயம் செய்தார். கொத்மலை எம். பியும்அரசாங்க அதிபரும் அவரை வரவேற்றனர்.

## 8-ம் வகுப்பில் 20பேருக்கு அனுமதி மறுப்பு

காரைநகர், புதன்

புங்குடுதீவு மகாவித்தியாலயத்திற்கு 8ம் வகுப்பில் அனுமதி கோரி சென்ற சுமார் 20 மாணவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டது. 7-ம் வகுப்புவரை உள்ள கனிஷ்ட பாடசாலை மாணவர்களே இவ்விதம் 8-ம் வகுப்புக்கு அனுமதிகோரினவர்களாவர். கல்வி இலாகாவினரால்நடத்தப்படும்பரீட்சையில் 150 தேர்வுப்புள்ளி பெறாத மாணவர்களுக்கே குறிப்பிட்ட மகாவித்தியாலயத்தில் அனுமதி வழங்க மறுக்கப்பட்டதாம். இதனால் இவ்வருடம் திரும்பவும் இந்த மாணவர்கள் கனிஷ்ட பாடசாலைகளில் 7 வகுப்பில் கல்விகற்கவேண்டி ஏற்பட்டது.

ரேடியோ, காப்பு, கடிகாரம், பணம்

# களவுபோனதா? பொலிசுடன் தொடர்புகொள்ளுங்கள்

யாழ்ப்பாணம், வியா

ட்ரான்சிஸ்டர் ரேடியோ தங்கக்காப்பு, கைக்கடிகாரம் ரொக்கப்பணம் முதலியவற்றுடன் சந்தேகத்துக்கிடமான முறையில் நடந்துகொண்ட ஒருவரைப்பொலிசார் கைது செய்து காவலில் வைத்துள்ளனர்.

மகோ பொலிசார் ஜெயசேன என்பவரை இது சம்பந்தமாக விசாரணைக்குட்படுத்தினர். இவரிடம் 716 ரூபா 30சதம் காணப்பட்டதாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

ரயிலில் களவாடப்பட்டிருக்கலாமென பொலிசார் கருதுகின்றனர். களவுகொடுத்தவர்கள் பொலிசாருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

## பத்தேசிங் உடல்நிலை

அமிர்தசரஸ், ஜன. 28

சண்டிகார் பிரச்னையில் உண்ணாவிரதத்தை மேற்கொண்டிருக்கும் சன்பத்தேசிங்குக்கு மூன்ருவது நாளான இன்று தோளிலும் மார்பிலும் வலிகண்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது இவர் உண்ணாவிரதத்தைக் கைவிட வேண்டுமென்று பஞ்சாப் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் கேட்டுக்கொண்டனர். ஆனால் திரு சன்பத்தேசிங் அவர்களது கோரிக்கைக்கு இணங்க மறுத்து தொடர்ந்து உண்ணாவிரதத்தை மேற்கொண்டிருக்கிறார்.

உரும்பராய் வியாழன்

உரும்பராய் தெற்கு சிங்கங்கண்டி செல்வபுரம்உதயசூரியன் சனசமூக நிலையக் கட்டிட திறப்புவிழாவும் 5வது ஆண்டுவிழாவும் இன்று நடைபெறவிருக்கிறது.

## தமிழரசு 6ல் கூடுகிறது

யாழ்ப்பாணம், வியாழன்

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் செயற்குழுக் கூட்டம் அடுத்த மாதம் 6-ந் திகதி வேலணையில் நடைபெறவிருக்கிறது.

வேலணையிலுள்ள கிளிநொச்சி எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினத்தின் இல்லத்தில் நடைபெறவிருக்கும் இக்கூட்டத்தில் தேர்தல் நியமனக்குழுவும் கூடி ஆராயும்.

அன்று மாலை 2 மணிக்கு தீவுப்பகுதி தமிழரசுக்கிளை வாலிப முன்னணியினரின் அரசியல் கருத்தரங்கு நடைபெறும். இந்நிகழ்ச்சிக்கு திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் தலைமை தாங்குவார். மாலை வங்களாவடியில் பகிரங்க பொதுக்கூட்டம் நடைபெறும்.

— —

## டாக்டர் புன்ஸ்தூ இலங்கை விஜயம்

கொழும்பு, புதன்

இம்மாதம் 30ந் திகதி கொழும்பில் நடைபெறும் மகாத்மாகாந்தியின் இறுதி விழாவாகிய மகாத்மா காந்தியின் 22வது சிரார்த்த தினத்தில் கலந்துகொள்ளுமுகமாகப் பாரதத்திலிருந்து டாக்டர் புன்ஸ்தூ இன்று கொழும்பு வந்துசேர்ந்தார். இவர் இன்றிரவு 8-15மணிக்கு கட்டுநாயக்கா விமான நிலையத்தில் இறங்கியபோது திரு. பாலசூரியா. திரு. கே. ஸி. தங்கராசா உட்படப் பல பிரமுகர்கள் வரவேற்றனர். டாக்டர் புன்ஸ்தூ இலங்கையின் சுதந்திரதின விழாவிலும் கலந்துகொள்வார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரிவிளம்பரம்

## தேவை

பழைய நாணயங்களும், பழைய முத்திரைகளும் தேவை. சாதாரண விலை கொடுக்கப்படும் பிற்பகல் 1 மணிக்குப் பின்னர் சுபாஸ் டூறிஸ்ட் ஒட்டலில் 3-ம் இலக்க அறையில் சந்திக்கவும், அல்லது 1253, தபாற்பெட்டி, கொழும்பு 3 என்ற விலாசத்திற்கு எழுதவும். 1805

மனேச்சர்:

யாழ். நகரில் பத்திரிகை-சஞ்சிகை வெளியிடும் பிரபல அச்சகத்திற்கு ரூபா 1000/- பிணைப்பணம் செலுத்தக்கூடிய பொறுப்பாளர் (Manager) தேவை ஆண் பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம் பாசித் திங்கள் 10ஆம் நாளுக்கு முன்னர் விண்ணப்பிக்கவும். C/o ஈழநாடு. 1810

## விற்பனைக்கு

வீடு:

சகல வசதிகளுடன் கூடிய வீடும், 7 பரப்பு காணியும் விற்பனைக்குண்டு. விபரங்கட்கு 221/3, கண்டி வீதி, அரியாலை, யாழ்ப்பாணம். 1796

காணி:

கோப்பாய் செற்கில் ராஜ வீதியிலிருந்து 75 யார் தூரமும், சிறைச்சாலைக்கு எதிராகவுமுள்ள எட்டுப் பரப்புக் காணி விற்பனைக்குண்டு, தொடர்பு கொள்க. யோகநாதன், 180, கண்டி வீதி, யாழ்ப்பாணம். 1799

வீடு:

கூட்டுத்தாபன உயர் அதிகாரியின் பாவனைக்கு 2,3 அறைகளுடன் மின்சார, குழாய்நீர் வசதிகளுடன் அமைந்த வீடு நல்ல குடிமனையுள்ள சுற்றுடலில் யாழ்ப்பாணப் பட்டினத்தில் பெப்ரவரி முதலாம் திகதி முதல் தேவை திரு. நடராஜ, 49, பெர்ணுண்டோ றோட், வெள்ளவத்தை, கொழும்பு. டெலிபோன்: 859 4-கொழும்பு. 1795

சுன்னுகம்

## ஐயனர் கோவில் கும்பாபிஷேகம்

சுன்னுகம், புதன்

சுன்னுகம் ஸ்ரீ ஹரிஹர புத்திர ஐயனர்கோவில் புனருத்தாரண வேலைகள் துரிதமாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. வருகிற

அரசாங்க ஏலவிற்பனை

பொலிஸ் திணைக்களம் என். 910- பாவிக்கப்பட்ட காக்கி உடைகள், தோல் சப்பாத்துகள், மழைக்கோட்டுகள், பெட்டிகள், பைசிக்கில்கள், பிறசுகள், கைப்பந்து மேல் உறைகள், கைப்பந்து பிளடர்கள், கைப்பந்து வலைகள் ஆதியன 1970-2-26-ந் திகதி காலை 10-00 மணிக்கு காங்கேசன்துறைப் பொலிஸ் நிலைய வளவில் ஏலத்தில் விற்கப்படும்.

மேலதிக விபரங்கட்கு 1970-1 29ந் திகதிய அரசாங்க வர்த்தமானியைப் பார்க்கவும்.

G. P. 1546

## விளம்பரம்

1970-ம் ஆண்டிற்கு அனலைதீவு கிராமசபையால் நடாத்தப்படும் இலவச ஆயுள்வேத வைத்திய சாலைக்கு மருந்துவகை விநியோகிக்க 11-2-70-ம் திகதிக்கு முன்னர் விலைப்பட்டியல்களை அனுப்பிவைக்குமாறு வேண்டிக்கொள்ளுகின்றேன்.

தலைவர், கிராமசபை அனலைதீவு.

1931

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### வியாழன் 29—1—70

செய்திகள்: காலை 6-45, 8-00, 8-30.

பகல் 12-00, 12-45, 1-30.

மாலை 4-25, 5-00, 6-00.

இரவு 7-00, 8-00, 9-00, 10-30.

திரைகானம்: காலை 7-30. பகல் 12-03.

இரவு 7-45, 10-00.

பகல் 1-00 அரங்கேற்றம்.

இரவு 7-15 வயலின், 8-03 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 நாடகம்.

## நெல்லியடியில் திறந்தவெளி அரங்கு

### கொழும்பில் ஆலோசனை

வெள்ளவத்தை, புதன்

நெல்லியடி பட்டினசபை எல்லைக்குள் பொதுவான திறந்தவெளி அரங்கு ஒன்றினை அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையை நெல்லியடி பட்டினசபையைச் சேர்ந்த இளைஞர்கள் விசேட ஆணையாளரிடம் விடுத்துள்ளனர் நாடகம் முதலிய கலைநிகழ்ச்சிகளை நடாத்து

# செய்திச் சுருக்கம்

### விசேஷ புகையிரத சேவை

கொழும்பில் அடுத்தமாதம் 4-ம் திகதி நடைபெறவிருக்கும் சுதந்திரதினக் கொண்டாட்டத்திற்கு நாட்டின் மற்றப் பகுதிகளிலுமுள்ளவர்களும் வந்து கலந்து கொள்ளுவதற்கு வசதியாக புகையிரதப்பகுதி விசேஷ புகையிரத சேவைகளை ஒழுங்கு செய்துள்ளது.

0 0 0

### மேற்கு ஜெர்மன் அன்பளிப்பு

இலங்கை மலேரியா தடுப்பியக்கத்திற்கு மேற்கு ஜெர்மன் ஜீப்புகள், லொறிகள் உட்பட பதினெட்டு வாகனங்களை வழங்கியுள்ளது. மேற்கு ஜேர்மன் ஸ்தானிகர் திரு. எவ் ஜே. ஹோப்மன் இவ்வாகனங்களை நாரம்பிட்டியாவிலுள்ள மலேரியா தடுப்பியக்கக் காரியாலயத்தில் வைத்துக்கையளிக்கவுள்ளார்.

0 0 0

### வாழ்த்துச் செய்தி

நேற்று முன்தினம் நடைபெற்ற அவுஸ்திரேலிய தினத்தையொட்டி இலங்கைப் பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா அவுஸ்திரேலிய பிரதமருக்கு வாழ்த்துச் செய்தியொன்றையனுப்பி வைத்துள்ளார்.

0 0 0

### பிரயாணிகள் கஷ்டம்

தலைவாக்கொல்லைப் பகுதி மக்கள் அப்பகுதியில் பஸ் சேவை சரியில்லாததனுல் பிரயாணம் செய்வதற்கு மிகவும்கஷ்டப் படுகிருர்கள். இங்குசேவையிலீடுபட்டுள்ள ஓரிரண்டு பஸ்களும் அடிக்கடி பழுதடைவதனுல் சில வேளைகளில் பஸ்சேவை ஸ்தம்பிதமடைவதாக புகார் தெரிவிக்கப் பட்டுள்ளது.

0 0 0

### முதலிடம்

அகில இலங்கையிலும் குடும்பத்திட்டத்தைக் கடைப்பிடிப்பதில் புத்தளப் பகுதி முதலிடம் பெற்றுள்ளதாக சுகாதாரஇலாகாசமீபத்தில் வெளியிட்ட புள்ளி விபரங்களின் மூலம் தெரிகிறது. இப்புள்ளிவிபரங்களின் மூலம் இரண்டாம்

### வீரமாமுனிவருக்குச் சிலை

பச்சிலைப்பள்ளி, புதன்

தாளையடிகிராமமுன்னேற்றச்சங்க புதிய கட்டிட முன்றலில் அமைந்துள்ள தாமரைத் தடாகத்தின் மத்தியில் வீரமாமுனிவர் சிலை அமைப்பதற்கு தாளையடி சனசமூக நிலையத்தினர் ஏற்பாடுகள் செய்து வருகின்றனர். இதற்கான செலவை கொழும்பு வர்த்தகர் எஸ். எஸ். பி. பெர்ணண்டோவும் வீரமாமுனிவர் சிலைக்காகும் செலவை தாளையடி வர்த்தகர் ஒருவரும் ஏற்றுள்ளார்கள்.

0 0 0

### பயிற்சி பெறச் சென்றனர்

நீர்கொழும்பு கடற்றெழில் பயிற்சி நிலையத்தில் மீன்பிடித்தல் மீன்பிடி உபகரணங்களை இயக்குதல் சம்பந்தமான ஆறுமாத காலப் பயிற்சியைப் பெறுவதற்காக தாளையடியைச் சேர்ந்த ம. கென்றிக் ம. செபமாலை, ம. றாபேட் பே. செபஸ்தியாம்பிள்ளை ஆகிய நால்வரும் அரசாங்கத்தால் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் தாளையடி சென். செபஸ்ரியன் மீன்பிடிக் கூட்டுறவு சங்க அங்கத்தவர்களாவர். விண்ணப்பம் அனுப்பிய நால்வரும் பயிற்சிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டது இங்கு குறிப்பிடத்தக்கது.

0 0 0

### புதிய நிர்வாகிகள்

கட்டைக்காடு கிராம முன்னேற்றச் சங்க மண்டபத்தில் நடைபெற்ற வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் கீழ்க்கண்டோர் நடப்பு வருட நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர் இ, கபிரியேற்பிள்ளை, உபதலைவர் ம, ஞானப்பிரகாசம் காரியதரிசி செ. எலியாஸ், உபகாரியதரிசி: அ கொன்ஸ்ரன்ரைன் தனுதிகாரி மி. மருசலீன்.

— —

## 'பழைய நூல்களே சிறந்தவை'

மா[illegible]

"இக்கால[illegible] சித்தாந்தக் கருத்துக்களைச் [illegible] பிரதிபலிப்ப

## ஒருவருடத்தில் 16,515 வீதி விபத்துக்கள்

கோட்டை, புதன்

வீதி விபத்துக்களில் இறந்தவர் தொகை கடந்த வருடத்தைப் போல் முன்னெருபொழுதும் அதிகமாக காணப்படவில்லை.

பொலிஸ் தலைமைக் காரியாலயம் 1969ம் ஆண்டு புள்ளிவிபர களில் இருந்து மேற்படி தகவலையறிவித்துள்ளது.

கடந்தவருடம் வீதிவிபத்துக்களில் இறந்தவர் தொகை 654 எனவும் இது அதற்கு முன்னைய வருடத்திலும் பார்க்க 71 ஆல் அதிகரித்துள்ளமையும் மேற்படி பொலீஸ் தலைமைக் காரியாலய புள்ளி விபரங்களில் இருந்து தெரியவருகிறது. 1968-1969ம் ஆண்டு காலப்பகுதியில் 16,515 விபத்துக்கள் சம்பவித்துள்ளன. இது அதற்கு முன்னைய வருடங்களிலும் பார்க்க 2,100ல் அதிகரித்துள்ளது. இந்த வீதி விபத்தில் 3,400ல் இ.போ.ச.பஸ்களும் சம்பந்தப்பட்டுள்ளன.

இலங்கையின் ஒன்பது மாகாணங்களிலும் கிழக்கு மாகாணத்திலேயே ஆகக் குறைந்த விபத்துக்கள் சம்பவித்துள்ளதாகப் பொலீஸ் தலைமைக் காரியாலயம் அறிவித்துள்ளது.

— —

## ஹோமியோபதிக்கு அங்கீகாரம்

கோட்டை, புதன்

ஹோமியோபதி இலங்கையில் அங்கீகாரம் பெற்ற மருத்துவமுறையாக அமுல் படுத்தப்பட்டுள்ளது. ஆட்சிமன்றத்தில் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா, அரசாங்கம் எடுத்த இந்த நடவடிக்கைக்காகப்பாராட்டுத் தெரிவித்தார்.

— —

## 'சஞ்சிகைகள் இல்லாத பெருங்குறை'

மட்டக்களப்பு, புதன்

'இங்கு போதிய தமிழ்ச் சஞ்சிகைகள் இல்லாதது ஒருமுக்கிய குறையாகும். வாராவாரம் வெளிவரும் பத்திரிகைகளில்எழுத்தாளர்களது விஷயங்கள்வெளிவந்தாலும், அவை போதாது என்றே கருதவேண்டியிருக்கிறது.'

இலங்கையின் புதிய இலக்கிய [illegible] சஞ்சிகையான [illegible] வெளியீட்டு விழா மட்டக்களப்பு நகரமண்ட

## உருளைக் கிழங்கு விளைச்சல்

பருத்தித்துறை, புதன்

விவசாயத்திணைக்களத்தால் வழங்கப்பட்ட உருளைக் கிழங்கு விளைச்சல் இவ்வாண்டு அபரிமிதமாக இப்பகுதியிலும், கரவெட்டி கரணவாய், துன்னலைப் பகுதிகளிலும் குறிப்பிடக் கூடியளவுக்கு முன்னேறியுள்ளது. விஞ்ஞான ரீதியில் இவை செய்கை பண்ணப்பட்டதும், அவற்றுக்கான உரம் உபயோகிக்கப்பட்டதும்இவ்விளைச்சலுக்குக் காரமெனத் தெரிகிறது

பல பாடசாலைகளில் உருளைக்கிழங்குச் செய்கை சிறந்த அறுவடையைக் கொடுக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

— —

## வர்த்தகர் மாணவர் மன்றம்

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ். மத்திய கல்லூரியின் வர்த்தக மாணவர் மன்ற 2-வதுஆண்டுபொதுக் கூட்டம் கல்லூரி வர்த்தக ஆசிரியர் என். எஸ். இரத்தினசிங்கம் தலைமையில் நடைபெற்றது. திரு. இரத்தினசிங்கம், பேசுகையில், வர்த்தக கலையும் விஞ்ஞான கலைக்கு நிகரான கலைதான் என்றும், விஞ்ஞானம் படிக்க முடியாமல் வர்த்தகத்தை படிக்கவேண்டியநிர்ப்பந்தம் ஏற்பட்டு விட்டதாக வர்த்தகப்பிரிவு மாணவர் கவலைப்படாமல் கவனமாகப்படிக்க வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.

வருடாந்த நிர்வாகச் சபையும் தெரிவு செய்யப்பட்டது. தலைவர்: அ. இந்திரன், காரியதரிசி: ப. சந்திரசேகரன், தனுதிகாரி: சி. ரவீந்திரன். 9பேர்கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது. (தே. நி)

— —

## லொறி விபத்து

மீதோட்டமுல்லை, புதன்

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு சீமெந்துஏற்றி வந்த லொறி ஒன்று பாலத்துறையில் விபத்துக்குள்ளாகியது.

இந்த லொறிச்சாரதி திரு எஸ். நடராசா சிறுகாயங்களுடன் தெய்வாதீனமாக உயிர்தப்பினர்.

திடீரென லொறியின் பிறேக் இல்லாமல்போன

# கரவெட்டியில் ஒரு காந்திக் கிராமம்

உடுப்பிட்டி, புதன்

கரணவாய் தெற்கு, "கப்பூது-அந்தணத்திடல்" காந்திக்கிராமமாகப் பிரகடனம் செய்யப்பட்டு உள்ளது. வடமராட்சிப்பகுதியில் முதலாவதாக அமைக்கப்பட்டுள்ள காந்திக்கிராமம் இதுவேயாகும்.

இக் காந்திக் கிராமத்தைப் பரிபாலிப்பதற்கெனச் சமூக சேவை அதிபர் திரு. என். சிவசிதம்பரத்தைத் தலைவராகவும், கிராமஅபிவிருத்தி அதிகாரி திரு. தேவசகாயத்தைக் காரியதரிசியாகவும் கொண்ட ஒரு குழு தெரிவு செய்யப்பட்டுள்ளது.

எதிர் வரும் 27-ம்திகதி இக்கிராமத்தில் கூட்டுப்பிரார்த்தனை ஒன்று ஆரம்பிக்கப்பட விருக்கிறது. அத்துடன் கப்பூதுகுயிலங்கன்றடி வீதியையும், அந்தணத்திடல் கொட்டையடி வீதியையும் சிரமதானம் மூலம் சீர்படுத்தும் வேலைகளும்ஆரம்பமாக விருகின்றன. இன்னும்ஏனைய கிராமங்களுககு முன்மாதிரியாக விளங்கும்வகையில் இக்கிராமத்தின் மலசல கூடங்கள், வைத்தியசாலைகள் மற்றும் வசதிகளையளிக்கும் நிலையங்களும் அமைக்கப்படவிருக்கின்றன.

இக் கிராமத்தின் சகல குறைபாடுகளையும் உடனுக்குடன் நீக்க வேண்டிய உதவிகளைச் செய்து அரசாங்கம் "விசேட சலுகை" அளித்து வருகின்றது. காந்திக்கிராமம் அல்லாத ஏனைய கிராமங்களுக்கு இவ்வித விசேட சலுகைகள் அளிக்கப்படமாட்டாதெனக் கூறப்படுகிறது.

— —

## திருத்தத்துடன் பிரேரணை நிறைவேறியது

சுன்னுகம், புதன்

மருதனுமடம் சந்தியிலுள்ள தர்மசாதன மடத்தைச் சுன்னுகம் பட்டின சபை ஏற்று அதை ஒரு பொதுஸ்தாபனமாக நடத்துவதென்று சபையின் மாதாந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

சபையின் 8ம் வட்டார உறுப்பினரான திரு இ இராசதுரை இதற்கான பிரேரணையைக் கொண்டு வந்தார். இம்மடத்தையும் அதனைச் சேர்ந்த ஆதனத்தையும் சபை பொறுப்பேற்று அதில் இலவச வைத்தியசாலையை நடத்த வேண்டுமென அவர் தமது பிரேரணையில் கோரியிருந்தார்.

குறித்த மடத்தை தற்போது நிர்வகித்துவரும் தர்மகர்த்தாக்கள் சட்டப்படி உறுதிப்பத்திரங்கள் முடித்து மடத்தையும் அதைச் சேர்ந்த ஆதனத்தையும் சபைக்கு உபயமாக அளிக்கும் பட்சத்தில் சபை அதனைப் பொறுப்பேற்று வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்றதிருத்தத்துடன் பிரேரணை நிறைவேறியது.

— —

## ஐ. தே. கட்சியில் சேர்ந்தனர்

குருநாகல், புதன்

இங்குள்ள எதிர்க்கட்சி ஆதரவாளர்களான 60 பேர் எதிர்க்கட்சியிலிருந்து ஐக்கியதேசியக் கட்சியைச் சேர்ந்துள்ளனர்.

இந்த 60 பேரும் தேசிய மய அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. டி. பி. வெலகெதர முன்னிலையில் ஐக்கியதேசியக் கட்சியில் சேருவதாகக் கையொப்பமிட்டனர். இவர்களை திரு. வெலகெதர பிரதமர் டட்லி சேனநாயக்காவிடம் அழைத்துச் சென்ருர். நாட்டின் பலத்துக்காக தேசிய அரசாங்கம் எடுக்கும் சகல நடவடிக்கைகளிலும் தாங்கள் பங்குபற்றி ஐ தே. கட்சிக்கும் அரசாங்கத்துக்கும் உதவுவதாகப் பிரதமரிடம் இவர்கள் உறுதி தெரிவித்தனர்.

— —

## ஆலய வீதி திறப்பு விழா

புலோலி, புதன்

கோவிற்கடவைப் பிள்ளையார் ஆலய மின்சாரதீப ஆரம்ப விழாவும் கோவிற்கடவைப்பிள்ளையார் வீதி திறப்புவிழாவும் 30 ந்திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவிருக்கின்றது.

உபசபாநாயகர் மு. சிவசிதம்பரம் ஆலய மின்சார தீபத்தை ஆரம்பித்துவைப்பார்.

பொதுக்கூட்டம் திரு மு. சிவசிதம்பரம் உபசபாநாயகர் தலைமையில் நடைபெறும்.

உள்ளூராட்சி அமைச்சர் அவர்கள் நுணுவில் பிள்ளையார் வீதிச் சந்தியிலிருந்து

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

சுன்னாகம் ஸ்ரீ ஹரிஹர புத்திர ஐயனார்கோவில் புனருத்தாரண வேலைகள் துரிதமாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. வருகிற 9-ந் திகதி நடைபெறவுள்ள மகா கும்பாபிஷேகத்தை முன்னிட்டு இப்பொழுது தினமும் நண்பகல் 12 மணி முதல் யந்திரபூஜை நடைபெறுகின்றது.

அச்சுவேலி பிரம்மஸ்ரீ குமாரசாமிக்குருக்கள் தலைமையில் இக்கும்பாபிஷேகம் நடைபேறும்.

— —

காங்கேசன்துறையில்

## இறைச்சி விலை குறைக்க முடிவு

மாவிட்டபுரம், புதன்

காங்கேசன்துறை பட்டினசபை எல்லைக்குள் இறைச்சியின் விலையைக் குறைப்பதென மேற்படி பட்டின சபையில் நடந்த ஒரு மாநாட்டில் முடிவெடுக்கப்பட்டிருக்கிறது.

சபைத் தலைவர் திரு. க. ஜெயபாலசிங்கம் தலைமையில் நடந்த இம் மகாநாட்டில் பட்டினசபை எல்லைக்குள் உள்ள கசாப்புக் கடை முதலாளிகள் கலந்துகொண்டனர்.

இறைச்சியின்விலை ஏற்றப்பட்டுள்ளது என சபைத் தலைவருக்கு மக்கள் புகார் செய்ததையடுத்து தலைவரால் கூட்டப்பட்ட இம் மகாநாட்டில் இறைச்சியின் விலையைக் குறைப்பதென முடிவு செய்யப்பட்டது.

தலைவர் தமது செலவில் விலைப்பட்டியல்களைத் தயாரித்து கசாப்புக் கடைகளில் தூக்குவதற்கு முதலாளிகள் சம்மதம் தெரிவித்தனர்.

...பட்டினசபையைச் சேர்ந்த இளைஞர்கள் விசேட ஆணையாளரிடம் விடுத்துள்ளனர் நாடகம் முதலிய கலைநிகழ்ச்சிகளை நடாத்துவதன்மூலம் மேற்படி பொதுவான அரங்கு அமைப்பதற்கான ஆரம்ப நிதியினைத் திரட்டவும் இவர்கள் தயாராகவுள்ளனர்.

இதற்கான ஆலோசனைக் கூட்டமொன்று கொழும்பிலுள்ள கரவெட்டி, துன்னாலை, வதிரி போன்ற பட்டினசபைப் பகுதிகளைச் சேர்ந்த வாலிபர் மத்தியில் நடைபெற்றது.

— —

## மக்கள் சீன உதவி

கொழும்பு, புதன்

இலங்கையில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 80 இலட்சம் தொன் அரிசியை வழங்க மக்கள் சீன செஞ்சிலுவைச் சங்கம் முன்வந்திருக்கின்றது. இந்த அரிசி ஏற்கனவே கப்பலில் ஏற்றப்பட்டுள்ளதென இலங்கையிலுள்ள மக்கள் சீன அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

...தாக சுகாதார இலாகா சமீபத்தில் வெளியிட்ட புள்ளி விபரங்களின் மூலம் தெரிகிறது. இப்புள்ளிவிபரங்களின் மூலம் இரண்டாம் இடத்தைக் கொழும்பும் மூன்றும் இடத்தை மட்டக்களப்பும் வகிப்பதாகவும் தெரிகிறது. புத்தளப்பகுதியில் 92 வீதமானோர் குடும்பத்திட்டத்தை அனுசரிப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

0 0 0

## பிச்சைக்காரருக்கு விடுதி

குடா ஓயாவில் அட்டன் பகுதியில் உள்ள பிச்சைக்காரர்களுக்கென இருபதினாயிரம் ரூபா செலவில் ஒரு விடுதி சமீபத்தில் நிறுவப்பட்டுள்ளது.

## ...சிறந்தவை'

மாவிட்டபுரம், புதன்

"இக்கால நூல்கள் சைவசித்தாந்தக் கருத்துக்களைச் ச[illegible]கப் பிரதிபலிப்பதில்லை. சைவசித்தாந்தக் கருத்துக்களை முறையாக அறிந்துகொள்வதற்குப் பழங்கால நூல்களையே பயன்படுத்தவேண்டும்" என தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மண்டபத்தில் ஆசிரியர்கள், மாணவர்கள் மத்தியில் பேசிய காஞ்சிபுரம் தொண்டைமண்டல ஆதீன சுவாமிகள் ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்ததேசிக பரமாசாரிய சுவாமிகள் கூறினார்.

கல்லூரிஅதிபர் திரு. ரி ரி ஜெயரத்தினம்இவ் வைபவத்திற்குத் தலைமைவகித்தார்

...என்று கருதவேண்டியிருக்கிறது.'

இலங்கையின் புதிய இலக்கிய மாத சஞ்சிகையான 'மலர்' வெளியீட்டு விழா மட்டக்களப்பு நகரமண்டபத்தில் நடைபெற்ற[illegible]து அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா இவ்வாறு குறிப்பிட்டார்.

கிழக்குப் பிரதேச வித்தியாதிபதி திரு வி சங்கரலிங்கம் மங்கள விளக்கேற்றி வைத்தார் சங்கீதபூஷணம் என் இராஜு வாழ்த்துப்பா இசைத்தார்.

மட்டக்களப்புதமிழ்எழுத்தாளர் சங்கத் தலைவர் திரு. ரி. பாக்கியநாயகம் சஞ்சிகையை பாராட்டி விமர்சன உரை நிகழ்த்தினார்.

நகரமேயர் திரு ஜே. எல். திசவீரசிங்கம் சஞ்சிகையின் ஆசிரியர் திரு இரா நாகலிங்கத்திடமிருந்து 'மலர்'முதற் பிரதியை வாங்கி விற்பனையை ஆரம்பித்து வைத்தார்.

—...

## புதிய நிர்வாகிகள்

சுழிபுரம், புதன்

சுழிபுரம் மேற்கு கலைமகள் சன சமூக நிலைய வருடாந்தப் பொதுக்கூட்டம் நிலைய மண்டபத்தில் நடைபெற்றது. புதுவருட நிர்வாகிகளாகப்பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: மு. தம்பிஐயா, உபதலைவர்: ச. இராமலிங்கம், செயலாளர்: மா. மகாதேவன், உபசெயலாளர்: ஆ: ஏரம்பு, பொருளாளர்: ஆ. செல்வராசா.

சு. சிவசண்முகமூர்த்தி, சி. கிருஷ்ணன், மா. அழகேந்திரம் மா, குணரத்தினம் ஆகியோர் நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

...யது.

இந்த லொறிச்சாரதி திரு எஸ். நடராசா சிறுகாயங்களுடன் தெய்வாதீனமாக உயிர்தப்பினார்.

திடீரென லொறியின் பிறேக் இல்லாமல்போன காரணத்தினாலேயே லொறி பாதையைவிட்டு விலகி பெரும் விபத்துக்குள்ளானதென பொலிசார் தெரிவித்தனர்.

இந்த விபத்தினால் சுமார் 2000 ரூபா சேதம்ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. (வி. நி)

— —

## பிற்போடப் பட்டுள்ளது

கோட்டை, புதன்

பாடசாலை மாணவர்களுக்கான அகில இலங்கை வேலை அனுபவதினமும் விவசாய தினமும் பெப்ரவரி9-ம் திகதி கொண்டாடப்படவிருக்கிறது. உள்ளூராட்சி அமைச்சின் உள்ளூராட்சி வாரக்கொண்டாட்டத்தோடு சேர்த்து இத்தினமும் கொண்டாடப்படவிருக்கிறது.

— —

## வெள்ள நிவாரணநிதி

யாழ்ப்பாணம், புதன்

வெள்ளநிவாரண நிதிக்கு கொக்குவில்மேற்கு கோவில் தோட்டத்தைச்சேர்ந்த திரு செ. நாகராசாபத்து ரூபாய் ஈழநாடு காரியாலயத்தில் வழங்கியுள்ளார்.

...அரசாங்கம் எடுக்கும் சகல நடவடிக்கைகளிலும் தாங்கள் பங்குபற்றி ஐ. தே. கட்சிக்கும் அரசாங்கத்துக்கும் உதவுவதாகப் பிரதமரிடம் இவர்கள் உறுதி தெரிவித்தனர்.

— —

## புதிய தூதர்

கோட்டை, புதன்

திரு. தடோதிரி துதம்மாயுக்ளாமல் இலங்கையில் பர்மியத் தூதராக நியமிக்கப்பட்டுள்ளார். சிறந்த அரசியல் வாதியும் அறிவாளியுமான இவர் 22வருட காலமாக பல நாடுகளில் தன் நாட்டுத் தூதராகக் கடமையாற்றிவருகிறார்.

தாய்லாந்து, இந்தோனேஷியா, சீனு, மஸ்கோலியா, இஸ்ரேல், ஐக்கிய இராச்சியம், நோர்வே, சுவீடன், டென்மார்க், ஐக்கிய அமெரிக்கா ஆகிய நாடுகளில் கடமையாற்றியுள்ளார்.

— —

## ஐ. நா. உதவும்

கோட்டை, புதன்

இரண்டரை வருட காலப் பகுதிக்குள் நாட்டின் பல பகுதிகளிலும் தொழிற் கல்விநிலையங்கள் நிறுவுவதற்கு இலங்கை அரசாங்கமும் ஐ. நா.வும் கூட்டாகச் சேர்ந்து திட்டமிட்டுள்ளன.

இத்தொழிற்கல்வி நிலையங்கள் நிறுவுவதற்கு ஐக்கியநாடுகள் விசேட [illegible]தி 6,59,200 டாலர் வழங்கவிருக்கிறது. இந்நிலையங்களுக்காக இலங்கை அரசாங்கமும் 5,56,000 டாலர் செலவிடவிருக்கிறது.

...பொதுக்கூட்டம் திரு மு. சிவசிதம்பரம் உபசபாநாயகர் தலைமையில் நடைபெறும்.

உள்ளூராட்சி அமைச்சர் அவர்கள் நுணுவில் பிள்ளையார் வீதிச் சந்தியிலிருந்து ஊர்வலமாக கோவிற்கடவை பிள்ளையார் விழா மைதானத்திற்கு அழைத்துச் செல்லப்படுவார்.

கோவிற்கடவை பிள்ளையார் வீதியை அமைச்சர் திறந்துவைப்பார்.

— —

## சைவப்புலவர்

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாரால் கடந்த வருடம் நடாத்தப்பெற்ற 'சைவப்புலவர்' பரீட்சையில், சித்தன் கேணி கலைநகரைச்சேர்ந்தவரும், வத்தளை அரசினர் றோமன் கத்தோலிக்க த.க.பாடசாலை ஆசிரியருமான திரு. நா க. தங்கரத்தினம் சித்தி பெற்றுள்ளார். சிறுகதை எழுத்தாளரும் ஓவியக்கலைஞரும், நடிகரும், கவிஞருமான இவர் கொழும்பு, நீர்கொழும்பு, வத்தளை ஆகிய இடங்களில் சுமார் 11 வருடங்கள் வரை ஆசிரியர் சேவை செய்துள்ளார். வட்டுக்கோட்டை திருநாவுக்கரசு வித்தியாசாலையினதும் வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரியினதும் பழைய மாணவரான இவர் கொழும்புத்துறை அரசினர்ஆசிரிய கலாசாலையில் ஆசிரிய பயிற்சி பெற்றவர்.

# இன்றைய பலன்

சோதிடக்கலாநிதி திருமலை க. வேலுப்பிள்ளை

தை மாதம் 16-ம் திகதி 29-1-70]

**மேஷம்**- நீண்டநாள் எதிர்பார்த்த நல்ல திருப்பம் இன்று ஏற்படமுடியும் குடும்ப விவகாரங்களில் பிணைப்புகள் இறுகும். காதல்உலகில் கனிவான சம்பவங்கள் இடம்பெறும். சுகபோகநாள்.

**ரிஷபம்**- செய்தொழிலில் தளர்ச்சி ஏற்படும் சதி செய்வதற்கு சகாக்களே சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருப்பர். பிரயாணத்தை தவிர்க்கவும். இறை நம்பிக்கை நன்று.

**மிதுனம்**- தெளிந்தமனம். தெய்வகுருபத்தியுடன் தேடியது கிடைக்கும். பரோபகாரச் சிந்தை வளரும். பொதுப்பணியை நாடுவீர்.

**கடகம்**- வணிகர்களுக்கு வியாபாரவிருத்திக்கு இடமுண்டு. புதிய முயற்சிகள் இன்று கைகூடும். செலவினங்கள் கைக்கடங்கியதாக இருக்கும்.

**சிம்மம்**- இளமை நினைவுகள் நிழலாட்டம்போடும். காதல் கணைதாக்கும். கவிஞர்கள் கௌரவிக்கப்படுவார்கள். பாலுணர்ச்சி மேலிடும்.

**கன்னி**- வாய்வுக்கோளாறு உடல்நலத்தை பாதிக்கலாம். உணவு விசயத்தில் சுகாதாரம்வேண்டும். தானிய நஷ்டத்துக்கு இடம் உண்டு. வியாபாரிகள் புதிய முதலீடுகளைத் தவிர்த்துக்கொள்ளவும்.

**துலாம்**- வெளியிடத் தொடர்புகளில் மந்தநிலை தென்படும். தொழில் சம்பந்தமான கவலை அதிகரிக்கலாம். திடீர்பிரயாணத்திற்கும் இடமுண்டு. உடல் நலம் பாதிக்கப்படக்கூடும். சுகாதாரம்வேண்டும்.

**விருச்சிகம்**- கனிவான நினைவுகள் தலைதூக்கும். காதல் விவகாரங்களுக்கும் இடம் உண்டு. இனிதான பேச்சின் மூலம் எல்லோரையும் வசீகரிப்பீர்கள். தனச் சிறப்புக்கும் இடம் ஏற்படும். சுபதினம்.

**தனுசு**- எதிர்பார்த்த வேதனம் இடையில் தடைப்படலாம். சிலர் வாழ்க்கையில் கடன்தொல்லையும் அதிகரிக்கும். சகோதரவழியால் சஞ்சலத்திற்கும் இடம் உண்டு, தெய்வநம்பிக்கைவேண்டும்.

**மகரம்**- வாகனம் செலுத்துவோருக்கு இன்று நன்மதிப்பு கிடைக்கும். தாய்வழித் தனவரவுக்கும் இடம் உண்டு கல்வித்துறையில் புதிய உற்சாகம் பிறக்கும். அறிஞர்களின் ஆதரவு கிடைக்கும். சுபதினம்.

**கும்பம்**- அறவழியில் நாட்டம் பிறக்கும். தாராள சிந்தை மேலிடும், குடும்பத்தில் சுமுகமான சூழ்நிலை தென்படும், எதிர்பார்த்த சுபகாரியமொன்றுக்கு இன்று வழிகோலப்படலாம். மதிப்பு உயரும்

**மீனம்**- அதிகாரக்குறைவுக்கு இடம் உண்டு. அபாயகரமான தொழில்களில் ஈடுபடுபவர்கள் அதிக கவனம் செலுத்தவேண்டும், குழந்தையொன்றின் உடல்நலம் பாதிக்கப்படலாம், அவசர நடவடிக்கையைத்தவிர்க்கவும்


★ உறுதியானதும்
★ நீடித்து உழைப்பதும்
★ தன்னிகரற்றதுமான

"வைத்திலிங்கம்ஸ்"

இரும்பு—பித்தளை - மரஸ்குறு ஆணிகளை

நீங்கள் வாங்குவதனால்
ஒரு சிறந்தபொருளை வாங்குவதோடு
உள்நாட்டுஉற்பத்தியையும் வளர்க்கின்றீர்கள்
என்பதை மறவாதீர்கள்.

தயாரிப்பாளர்:

என். வைத்திலிங்கம் நிறுவனத்தார்

இரும்பு வியாபாரிகள்
450, பழைய சோனக தெரு, கொழும்பு-12
தொலைபேசி: 33143—4

கிளை- 38 கே. கே. எஸ். வீதி - யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 530



'ஈழநாடு' காரியாலயத்தில்

விற்பனைக்குள்ள புத்தகங்கள்

| | புத்தகங்கள் [ஆங்கில மொழியில்] | ஆக்கியோன் | விலை |
|---|---|---|---|
| 1. | முதலாவது உலக தமிழ் மகாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆராய்ச்சிக்கட்டுரைத்தொகுதிகள் I & II— | மகாநாட்டில் கலந்துகொண்ட புகழ்பெற்ற பேர் அறிஞர்கள் | ரூபா 250/- |
| 2. | தற்கால தமிழ் இலக்கியத்தில் பெண் — | ஸ்ரீமதி லோகநாயகி நன்னித்தம்பி | ரூபா 12/- |
| 3. | மகாபலிபுரம் பற்றி விளக்கப்படங்களோடு கூடிய நூற்பட்டியல் — | William Willetts | ரூபா 5/- |
| 4. | திராவிடமொழிகள் பற்றிய விபரங்கள்அடங்கிய நூற்பட்டியல் — | M. Andronov | ரூபா 5/- |
| 5. | தூரதேசங்களில் தமிழ் படிப்பு — | | ரூபா 15/- |
| | ,, ,, ,, — | (கலிகோ பைன்டிங்) | ரூபா 21/- |
| 6. | மகாத்மாகாந்தி வெள்ளேடு(Album படங்களுடன்)— | ராஜேந்திரபிரசாத் முன்னுரையுடன் | ரூபா 10/- |
| 7. | மகாத்மா காந்தியின் செய்திகள் — | மோகன்ராவ் | ரூபா 1/50 |
| 8. | சிறுவர்கள் ராமாயணம் — | M. பூதலிங்கம் | ரூபா 2/- |
| 9. | காந்தி கதை (வண்ணப்படங்களுடன்) — | | ரூபா 2/50 |

கையிருப்பில் சொற்ப பிரதிகளே உள்ளன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரான்ஸ் வழங்கும் விமானங்களை இஸ்ரேலுக்கு எதிராகபாவிக்ககூடாது

## லிபியாவுக்கு பிரஞ்சு பிரதமர் எச்சரிக்கை

பாரிஸ், ஜன. 28

லிபியாவுக்கு பிரான்ஸ் வழங்கவிருக்கும் போர் விமானங்களில் ஒன்ருவது இஸ்ரேலுக்கு விரோதமாக பாவிக்கப்பட்டால் பிரான்ஸ் மேற்கொண்டும் போர்விமானங்களை லிபியாவுக்குக் கொடுத்துதவாது என்று பிரெஞ்சு பிரதம மந்திரி திரு. ஷெபான் டெல்மார் கூறியிருக்கிருர்.

லிபியாவுக்கு தனது எண்ணெய்க் கிணறுகளைப் பாதுகாத்துக்கொள்வதற்கு இவ் விமானங்கள் தேவைப்படுகின்றன. அந்த அடிப்படையிலேயே பிரான்ஸ் லிபியாவுக்கு 100 மிராஜ் சண்டை விமானங்களைக் கொடுக்க முன்வந்தது. இந்த விமானங்களில் ஒன்ருவது இஸ்ரேல் எல்லைப் பிராந்தியங்களில் காணப்படுமாளுல் பிரான்ஸ் மேற்கொண்டு விமானங்களை லிபியாவுக்கு கொடுக்காது என்று திரு டெல்மார் குறிப்பிட்டார். டெலிவிஷன் பேட்டி ஒன்றில் அவர் பேசினுர்.

திரு. டெல்மார் இவ்வாறு அறிவித்த அதேவேளையில் பிரெஞ்சு செனட்சபை பிரெஞ்சு அரசினர் மேற்காஸிய கொள்கையைப் பெரிதும் குறைகூறி ஒரு தீர்மானம் நிறைவேற்றியது.

இத்தீர்மானம் நிறைவேறுவதற்கு முன்னர் பிரெஞ்சு வெளிநாட்டமைச்சர் திரு ஷீமன் பேசினுர்.

மேற்காஸிய நிலைமை சம்பந்தமான அரசாங்கத்தின் கொள்கையை அவர் விளக்கிப் பேசுகையில், மேற்காஸியப் பிரச்னைக்குத் தீர்வு காணும்வகையில் பிரான்ஸ் புதிய யோசனைகளை வல்லரசு நாடுகளிடம் சமர்ப்பிக்க விருப்பதாகத் தெரிவித்தார் தாம் சமீபத்தில் லண்டனுக்குப் போயிருந்தபொழுது இச்சமரசத்திட்டம் பற்றி பிரிட்டிஷ் தலைவர்களுடன் விவாதித்ததாகவும் பிரிட்டிஷ் தலைவர்கள் மத்தியில் எதிர்ப்பிருந்ததாகத் தெரியவில்லையென்றும் கூறினுர்

என்ருலும் செனட்சபையின் வெளிவிவகாரக் கமிட்டி பிரெஞ்சு அரசாங்கத்தின் மேற்காஸிய கொள்கையைக் கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்றியது 'இஸ்ரேலுக்கு ஆயுதங்கள் வழங்குவதன் மீது தடைவிதித்துவிட்டு அதன் எதிரி நாடுகளுக்குச் சண்டை விமானங்களை பிரான்ஸ் வழங்குவதனுல் மேற்காஸியாவில் பதற்றம் ஏற்படுமென்றும் இவ்விஷயம் குறித்துசெனட்சபை விவாதிக்கவேண்டும் என்றும் இக்கமிட்டி கோரிக்கை விடுத்தது.

இக்கமிட்டியில் டிகோல் ஆதரவாளர்கள் குறைவாக விருப்பதன் காரணமாகவே அரசாங்கத்திற்கெதிரான தீர்மானம் நிறைவேறியது. என்ருலும் இத்தீர்மானம் அரசாங்கத்தைக் கட்டுப்படுத்தாது என்று கூறப்படுகின்றது'.

### நிக்சன் மீது அரபுக்கள் சீற்றம்

இஸ்ரேலுக்கு மேலும் ராணுவ உதவிகள் வழங்க அமெரிக்கா விரும்புவதாக அதிபர் நிக்சன் சமீபத்தில் [illegible]

## இஸ்ரேல் பிரதமர் வரவேற்பு

நிக்சனின் இவ்வறிவிப்பு இஸ்ரேலுடனுன அமெரிக்காவின் நட்பையும், இஸ்ரேலின் பாதுகாப்பில் அமெரிக்காவுக்கு இருக்கும் அக்கறையையும் காட்டுவதாகவிருக்கின்றது என்று ஜெருசலத்தில் பிரதமர் திருமதி கோல்டா மெயர் கூறியிருக்கிருர்.

பிரதமர் மெயர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் நேரடிப் பேச்சுக்கள் மூலம் தான் மேற்காஸிய நிலைமைக்கு நிரந்தரமான தீர்வுகாண முடியுமென்று திரு. நிக்சன் தெரிவித்த கருத்தை வலியுறுத்திஞர். அந்த நிலைமை உருவாகும் வரை இஸ்ரேலுக்கிருந்துவரும் பயமுறுத்தலைச் சமாளிக்க இஸ்ரேல் தயாராயிருக்கவேண்டும் என்பதை அமெரிக்கா உணர்ந்திருக்கின்றது என்ருர் திருமதி மெயர்

## தேசியஇளைஞர்படையில் சேருமாறு அழைப்பு

# பொருளாதார அபிவிருத்திகளை நேரடியாக அறியவந்திருக்கிறேன்

## பிரிட்டிஷ் பெண் மந்திரி கூறியது

கொழும்பு, புதன்

"தென் ஆசிய பிராந்தியத்திற்கு நான் மேற்கொள்ளும் இந்தமுதல் விஜயத்தில், முதன்முதலாக இலங்கைக்கு வருவதையிட்டு நான்பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன்" என்று இலங்கை வந்துள்ள பிரிட்டிஷ் பெண் மந்திரி திருமதி ஜூடித் கூறினுர்.

"நான் இங்கு தங்கியிருக்கும் சொற்ப காலத்தில், உங்களது பிரச்னைகள் பற்றியும், உங்கள் பொருளாதார அபிவிருத்தியின் சாதனைகள் பற்றியும் நான் நேரடியாக கண்டறியமுடியுமென நம்புகிறேன்.

"நான் இங்கு எவ்வித குறிப்பிட்ட திட்டங்களுடனும் வரவில்லை. எமது இரு நாடுகளுக்கும் மத்தியில், அபிவிருத்திக்கான உதவிகள் சம்பந்தமாக நித்தமும் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுக்கொண்டே இருக்கின்றன.

"இன்றிலிருந்து இன்னும் ஒரு மாதத்தில் பாரிஸில் நடைபெறவிருக்கும் இலங்கை உதவிக்குழு மகாநாட்டின்போது, எனது அமைச்சும் பூரணமாகபங்கு கொள்ளும் என்ருர் அவர்.

நான் இலங்கை வந்திருப்பதன் பிரதான நோக்கம், உங்களது நிலைபற்றி நன்கு அறிந்துகொள்ளத்தான். அத்துடன் உங்களது கல்லோயா அபிவிருத்தி திட்டத்தையும் நான் நேரில் சென்று பார்வையிடவிருக்கிறேன்.

நான் உங்களது பிரதம மந்திரியையும், அமைச்சர்களையும், அரசாங்க அதிகாரிகளையும் சந்தித்துப்பேசவிருக்கிறேன்.

பிரிட்டன் இலங்கைக்கு வழங்கிவரும் உதவிகள் பற்றியும் அவர் விளக்கினுர்.

### திருமதி. ஜூடித் ஹாட்டின் அரசியல் வாழ்க்கை

1964ம்ஆண்டுஅக்டோபர் மாதம் பிரிட்டிஷ் தொழிற் கட்சி ஆட்சிபீடம் ஏறியதிலிருந்து திருமதி. ஜூடித் ஹாட் பிரிட்டிஷ் அமைச்சரவையில் அங்கத்தவராக கடமையாற்றி வருகிருர். கூட்டுப்பாராளுமன்ற உதவி ராஜாங்க மந்திரியாகவும், சாம்ராஜ்ய விவகார ராஜாங்க மந்திரியாகவும் பதவி வகித்தபின்பு1967-ம்ஆண்டு சமூக பாதுகாப்பு அமைச்சராகவும், அதேவேளை பிரிவு கவுன்சில்அங்கத்தவராகவும் நியமிக்கப்பட்டார். இதனையடுத்து 1969-ம் ஆண்டு அக்டோபர்மாதம் நடைபெற்ற மந்திரிசபை மாற்றத்தின் போது, அவர் தற்போதுள்ள பதவியில் அதாவது பிரிட்டிஷ் வெளிவிவகார அபிவிருத்தி அமைச்சராக நியமிக்கப்பட்டார்.

1959-ம்ஆண்டு அக்டோபர் மாதத்திலிருந்து திருமதி ஹாட் லனுக்ஸயர் பிரிவின் லனுக் தொகுதி பாராளுமன்ற அங்கத்தவராக (தொழிற் கட்சி) இருந்து வருகிருர். 1924-ம்ஆண்டு செப்டம்பர் 18-ந்திகதி பிறந்த அவர் கிளிதேரோ ரோயல் கல்லூரியில் ஆரம்ப கல்வி பெற்று, பின்பு லண்டன் பொருளாதார கல்லூரியில் பயின்று [illegible] கௌரவ பட்டதாரிப் பட்டம் பெற்ருர். லண்டன்சர்வ [illegible]

சுகாதார அமைச்சில் விரிவுரைகள் நிகழ்த்திவந்ததுடன் லனுக்ஸயரிலுள்ள அபிவிருத்தி கூட்டுத்தாபனத்தில் ஆராய்ச்சியையும் மேற்கொண்டு வந்தார். பின்பு அவர் ஸ்கொட்லாந்து திட்டக்குழுவொன்றிற்கு தலைவராகக் கடமையாற்றியதுடன் மனேவளர்ச்சி குன்றிய சிருர்க்குஉள்ளூராட்சி மூலம் நிவாரணமளிக்கும் திட்டமொன்றிலும் பணியாற்றினுர்.

அவர் பாராளுமன்ற அங்கத்தவராக கடமையாற்றிய போது, பாராளுமன்ற தொழிற் கட்சியின் விஞ்ஞான குழுவிற்கு உப-தலைவராகவும், காலனித்துவ சுதந்திர இயக்கத்தின் உப-தலைவராகவும் பணிபுரிந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

பாராளுமன்ற அங்கத்தவர் என்ற கோதாவில் அவர் பல சர்வதேச மகாநாடுகளில் பங்குபற்றினுர். சாம்ராஜ்ய விவகார ராஜாங்க மந்திரியாக அவர் பதவியேற்றதைஅடுத்து பல்வேறு சாம்ராஜ்ய நாடுகளுக்கு விஜயம் செய்ததுடன், ஜிப்ரால்டர் மற்றும்கரேபியன்நாடுகளுக்கும் ராஜதந்திர தூதுகள் மேற்கொண்டார்.

1969-ம்ஆண்டு ஜூலைமாதத்தில் திருமதி. ஹாட், மாத [illegible] புதிய தேசிய கமிஷனின் இணைத் தலை[illegible]

### வாழைக்குலை கண்காட்சி

சென்னை. ஜன. 28

அகிலஇந்தியவாழைக்குலை [illegible]

## "அடுத்தவர் கருத்துக்கும் மதிப்பளிக் கவேண்டும்"

### மாணவர்களுக்கு எம். ஜி. ஆர். புத்திமதி

சென்னை, ஜன 28

'மாணவர்கள் கல்வி கற்பதுடன் மற்றப் பிரச்னைகளையும் நன்கு தெரிந்து வைத்திருக்கிருர்கள். பிரச்னைகளில் விவாதம் ஏற்படலாம் விவாதத்தில் வெற்றியடைகிருேமா, தோல்வியடைகிருேமா என்பது முக்கியமல்ல. உண்மையானது' நியாயமானது என்ருல் தோல்வியைப்பற்றிக் கவலைப்படக் கூடாது. அடுத்தவருடைய கருத்தும் நன்மையுண்டாக்கும் என்ருல் ஏற்றுக் கொள்ள வேண்டும்" இவ்வாறு கூறினுர் நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன்.

திராவிட மாணவர் முன்னேற்றக்கழக மகாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினுர்.

அவர் மேலும் பேசுகையில், 'கழகத்தை அசைக்க முடியாதவாறு ஆணிவேராக மாணவர்கள் இருக்க வேண்டும்" என்று கேட்டுக் கொண்டதுடன் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து நடக்கப் பழக வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

## ஜெமினி கணேசனுக்கும் பத்மஸ்ரீ பட்டம்

புதுடில்லி, ஜன. 28

இந்திய குடியரசு தினத்தை முன்னிட்டு சிறந்த முறையில் சேவை செய்த கலைஞர்களுக்கும், பிரமுகர்களுக்கும் வழங்கப்பட்ட விருதுகள் பற்றி மேலும் தகவல்கள் வந்துள்ளன.

தமிழ் நாட்டைச் சேர்ந்த பிரபல தமிழ்ப் படக் கதாநாயகன் நடிகர் ஜெமினி கணேசனுக்கு "பத்மஸ்ரீ" பட்டம் கொடுக்கப்பட்டுள்ளது.

தொழில் அதிபரான திரு ஏ. ராமசாமி முதலியாருக்கு 'பத்மவிபூஷண்' பட்டம் வழங்கப்பட்டுள்ளது. தமிழ்ப்பட பாடகி கே. பி. சுந்தரம்பளுக்கு 'பத்மஸ்ரீ' பட்டமும், தமிழ் நாடு முன்னுள் கல்வி மந்திரி டி. எஸ். அவினுசிலிங்கம் செட்டியாருக்கு 'பத்மபூஷண' பட்டமும் வழங்கப்பட்டுள்ளது.

மற்றும் 'பத்மஸ்ரீ' பட்டம் பெறுவோர் விபரம் வருமாறு:

புல்லாங்குழல் வித்துவான் டி. ஆர். மகாலிங்கம், கிரிக்கெட் விளையாட்டு வீரர்கள் பேடி, பிரசன்னு, மருத்துவ நிபுணர் சதாசிவம், கல்வி நிபுணர் தேவநேசன், பின்னணிப் பாடகர் கண்டசாலா, தெலுங்கு சிரிப்பு நடிகர் ரேலங்கி, சென்னை இயற்கை ஆராய்ச்சியாளர் எம். கிருஷ்ணன், பிரபல நாட்டிய நடிகை குமாரி கமலாவுக்கு ஜனுதிபதியின் 'பத்மபூஷண்' பட்டமும் கிடைத்துள்ளது.

## இலங்கைக்கான மேலதிக பிரிட்டிஷ் உதவி

லண்டன், ஜன. 28

கடந்த வருடம் ஜூலை 5-ம் திகதி கைச்சாத்திடப்பட்ட உடன்பாட்டின் கீழ் இலங்கைக்கு பிரிட்டன் வழங்க முன்வந்த 40 லட்சம் பவுண் (ரூபா 57,200,000) கடனுதவி, தற்போது மேலும் 500,000 பவுண்களால் அதிகரிக்கப்பட்டுள்ளது. தற்சமயம் இருநாடுகளுக்கும் மத்தியில் ஏற்பட்டுள்ள உடன்பாட்டின் கீழ், இலங்கையின் அபிவிருத்திக்கு அத்தியாவசிய தேவையாகக் கருதப்படும் இயந்திர சாதனங்களும், [illegible]

மாக பிரிட்டன் கொடுக்கத் தீர்மானித்திருக்கும் 500,000 பவுண்களையும், கூடிய விரைவில் அளிக்குமாறு இலங்கை அரசாங்கத்திற்கும் பிரிட்டனுக்கும் இடையில் சமீபகாலமாக பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வந்தன. இம்மொத்தத் தொகை 1970 மார்ச் 31-ம் திகதிக்குள், பயன்படுத்தப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

அதே சமயம் 1969-ம் ஆண்டு பாரீஸில் நடைபெற்ற உதவியளிப்பு மகாநாட்டில், பிரிட்டன் இலங்கைக்கு அளிப்பதாக வாக்[illegible]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தேசிய இளைஞர் படையில் சேருமாறு அழைப்பு

புலோலி, புதன்

வடமராட்சி இளைஞர்களை தேசிய இளைஞர் படையில் சேரும்படி வடமராட்சி காரியாதிகாரி திரு. எஸ். ஜெயகாந்தன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஒவ்வொரு பகுதியிலும் தேசிய இளைஞர் படைகளை அமைக்குமாறு அரசாங்கம் விடுத்த கோரிக்கைக்கு அமையவே வடமராட்சிப் பிரிவுகளுக்குப் பொறுப்பாகவுள்ள காரியாதிகாரி இவ் வேண்டுகோளை விடுத்தார்.

ஆயினும் இளைஞர்கள் இவ்வியக்கத்தில் சேருவதற்கு ஊக்கங்காட்டாமையால் அப்பகுதியிலுள்ள கிராமசேவகர்களை படையிற்சேரவிரும்பும் இளைஞர்களைப்பதிவு செய்யும்படி கேட்டுக்கொண்டுள்ளார்

வேண்டுகோளில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

, இப்படையில் சேரவிரும்புகின்ற இளைஞர்கள் தமது பகுதியிலுள்ள கிராமசேவையாளரிடமும் காரியாதிகாரியிடமும் விபரங்களைத் தெரிந்து கொள்ளலாம். இவ்வியக்கத்திற் சேர்ந்தவர்களுக்கு அரசாங்கம் தனது செலவிலேயே பயிற்சியளிப்பதுடன் அடையாள அட்டையும் வழங்கும் இதனுல் அவர்கள் எதிர்காலத்தில் வேலைகள் பெறவும் வாய்ப்புக்கிடைக்கும்.

# 'வாக்குறுதியை காப்பாற்றுக'

## பட்டதாரிகள் சங்கம்

## எம். பி. க்களிடம் கோருவர்

கோப்பாய், புதன்

அகில இலங்கை வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் தலைவர் திரு. கே. சதானந்தன் தலைமையில் நடைபெற்றபோது பின்வரும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப் பட்டுள்ளன.

தமிழ்பேசும் ஆட்சிமன்ற உறுப்பினர்களால் வேலையற்ற பட்டதாரிகளுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதிகளை உடன் நிறைவேற்றும்படி அவர்களைக் கோருவது,

எதிர்வரும் பொதுத் தேர்தலின் முன்னர் பட்டதாரி ஆசிரியர்களுக்கு பதவி நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு பிரதமரிடம் கோருவது.

அடுத்து நடைபெற்ற புதுவருட உத்தியோகத்தர் தேர்தலில் தலைவராகத் திரு கே சிவசுப்பிரமணியமும், செயலாளராக திரு கே சதானந்தனும், பொருளாளராக திரு ஆர் சிவராசாவும் தெரிவு செய்யப்பட்டனர்.

# 'நிலத்துக்கு வரி செலுத்தாதவர் மீது சட்ட நடவடிக்கை'

எழுதுமட்டுவாள், புதன்

'அரசாங்கம் சகல சாகுபடி செய்யும் நிலங்களுக்கும் ஏக்கருக்கு 6 ரூபா வரியாக அறவிடத் தீர்மானித்துள்ளது. இத்தீர்மானத்துக்கமைய ஒவ்வொரு விவசாயியும் வரிப்பணம் செலுத்தியாகவேண்டும். வரிப்பணம் செலுத்தத்தவறும் விவசாயிகள் மேலும் நிலச்சுவாந்தர்கள்மீதும் சட்டநடவடிக்கை எடுக்கப்படும்'.

இவ்வாறு மறவன்புலோவில் நடைபெற்ற பயிர்ச்செய்கைக்குழுக் கூட்டத்தில் கலந்துரையாற்றிய கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. எம். மகாலிங்கம் குறிப்பிட்டார்.

இக்கருத்தை வன்மையாகக் கண்டித்த பயிர்ச் செய்கைக்குழுத்தலைவர் திரு. எம். கனகரத்தினம் கூறியதாவது:-

கடந்த காலத்தில் இருபோகமும் விளையக்கூடிய தண்ணீர் வசதியுள்ள விவசாய நிலங்களுக்கே ஏக்கர் ஒன்றுக்கு வரியாக 6 ரூபா செலுத்த வேண்டுமென்ற விதிஇருந்தது. இதனைமாற்றி வானத்தைநம்பி ஒருபோகம் கூட சரியாக விளைவிக்க முடியாத நிலங்களுக்கும் வரிப்பணம் 6 ரூபா செலுத்தும்படி கூறுவது அநீதியாகும். அப்படியானுல் முந்திய வழமைப்படி ஏக்கருக்கு 3 ரூபா கட்டுவோம்'

திரு. கனகரத்தினத்தின் கோரிக்கையை மறுத்து சட்டப்படி ஏக்கருக்கு 6 ரூபா கட்டவேண்டுமென கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் கூறினுர்

## அரபுக்கள் சீற்றம்

இஸ்ரேலுக்கு மேலும் ராணுவ உதவிகள் வழங்க அமெரிக்கா விரும்புவதாக அதிபர் நிக்சன் சமீபத்தில் அறிவித்திருந்தது குறித்து அரபுநாடுகள் யாவும் குறை கூறியிருக்கின்றன. லிபியாவுக்கு பிரான்ஸ் 100 மிராஜ் சண்டை விமானங்களைக் கொடுக்க முடிவுசெய்ததன் காரணமாக இஸ்ரேலுக்கு 150 விமானங்கள் வரை கொடுத்துதவுவதற்கு அமெரிக்கா திட்டமிடுகிறதென்று கெய்ரோவில் 'அல் அஹ்ரம்' என்ற பத்திரிகை குறை கூறியிருக்கின்றது.

வேறு பல அரபுநாடுகளும் நிக்சனின் கொள்கையைக் கண்டித்திருக்கின்றன இஸ்ரேலுக்கு ராணுவ உதவிகள் வழங்கப்போவதாக திரு. நிக்சன் அறிவித்திருப்பது அரபுநாடுகள் மீது போர்ப்பிரகடனம் செய்வதாகும் என்று அல் அஹ்ரம் குற்றஞ்சாட்டியிருக்கின்றது

இஸ்ரேலுடன் நேரடியாக அரபுநாடுகள் பேசிப் பிரச்னைகளைத் தீர்த்துக்கொள்ள வேண்டுமென்று திரு. நிக்சன் கூறியிருப்பதை லெபனுன் பிரதமர் திரு. ரஸீத் கராமியும் கண்டித்திருக்கிறுர்

## 5 இலட்சம் சிசு மரணம்

நியூயோர்க் ஜன. 82

அணு ஆயுதப் பரிசோதனையின் பயனுக அமெரிக்காவிலும் பிரிட்டனிலும் 5 இலட்சத்துக்கதிகமான சிசு மரணம் ஏற்பட்டுள்ளதாக விஞ்ஞானி ஒருவர் இன்று கூறினுர். இத்தகைய கொடிய நிலை ஏற்படாமல் குறிப்பிட்ட இருநாடுகளும் தற்பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று அத விஞ்ஞானி எச்சரிக்கைவிடுத்துள்ளார்

## அண்ணு முத்திரை

புதுடில்லி, ஜன. 28

காலஞ்சென்ற தமிழ்நாடு முதலமைச்சர் திரு. சி. என் அண்ணுத்துரை உருவம் பொறித்த 25 பைசா முத்திரை வெளியிடப்படவிருக்கின்றது அண்ணுவின் முதலாவது இறந்த தினம்பெப்ரவரி 3ம் திகதி அனுஷ்டிக்கப்படவிருப்பதையொட்டி இந்த முத்திரை வெளியிடப்படவிருக்கின்றது.

ரோயல் கல்லூரியில் ஆரம்பக் கல்வி பெற்று, பின்பு லண்டன் பொருளாதார கல்லூரியில் பயின்று சமூகவியலில் கௌரவ பட்டதாரிப் பட்டம் பெற்றுர். லண்டன்சர்வகலாசாலையின் ஓர் அங்கமாக விளங்கிய லண்டன் பொருளாதார கல்லூரி, யுத்தகாலத்தின் போது கேம்பிரிஜ் சர்வகலாசாலைக்கு இடம் பெயர்க்கப்பட்டது. அவ்வேளை ஒரு மாணவியாக இருந்த திருமதி ஹாட், கேம்பிரிஜ் சர்வகலாசாலையின் தொழிற் கழகத்திற்கு காரியதரிசியாக தெரிவு செய்யப்பட்டார்.

சமூகவியல் நிபுணராக தொழிலாற்ற ஆரம்பித்த திருமதி. ஹாட், பிரிட்டிஷ் ... மேற்கொண்டார்.

1969-ம்ஆண்டு ஜுலைமாதத்தில் திருமதி. ஹாட், மாதர்களுக்கான புதிய தேசிய கமிஷனின் இணைத் தலைவராகநியமிக்கப்பட்டார். அதுடன் சமீபத்தில் நடைபெற்ற தொழிற் கட்சியின் வருடாந்த மகாநாட்டின் போது கட்சியின் தேசிய செயற்கமிட்டி அங்கத்தவராகவும் நியமனம் பெற்றுர்.

1946.ம் ஆண்டில் அவர் அந்தனி பெர்னுட் ஹாட் (கலாநிதி, எவ். ஆர். ஐ. சி.) என்பவரை திருமணம் செய்தார். திருமதி. ஹாட்டிற்கு இரு ஆண்பிள்ளைகள் உண்டு.

## வாழைக்குலை கண்காட்சி

சென்னை, ஜன. 28

அகிலஇந்தியவாழைக்குலை கண்காட்சியில் தமிழ்நாட்டுக்கு முதல் பரிசு கிடைத்துள்ளது இக்கண்காட்சியில் ஆறு மாநிலங்கள் கலந்துகொண்டன. "இந்தியாவிலேயே வாழைப்பழ உற்பத்தியில் தமிழ்நாடு தான் முன்னணியில் நிற்கிறது" என்று விழாவுக்குத் தலைமை தாங்கிய தமிழ்நாடு கவர்னர் உஜ்ஜல்சிங் கூறினுர்.

# மேற்குவங்க கூட்டணி பிரச்னை முடிந்தபாடில்லை

## அரசு எந்த நிமிடத்திலும் கவிழலாம்

கல்கத்தா, ஜன 28

மேற்கு வங்க ஐக்கியமுன்னணி ஆட்சிக்கு ஏற்பட்டிருக்கும் ஆபத்து இன்னும் தீர்ந்தபாடில்லை கூட்டுமுன்னணிக் கட்சிகள் திங்கட்கிழமை நடத்திய கூட்டத்தின் முடிவுகள்பற்றி பாங்கள காங்கிரஸ் காரியதரிசி திரு. சுசில்தாரா அறிவித்திருக்கிறுர்.

இந்தக் கூட்டத்தின் பின்னரும் அதிருப்தியளிக்கும் சம்பவங்கள் நடைபெற்று வருவதாக அவர் நிருபர்களிடம் கூறினுர்.

இதற்கிடையில் மேற்கு வங்காள மார்க்ஸீய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் திரு. ஜோதிபாசுவும் சுந்தரையாவும் புதுடில்லிக்குப் போயிருக்கிறுர்கள்,

மேற்கு வங்காள அரசாங்கத்தின் பொருளாதாரக் கோரிக்கைகள்பற்றி மத்திய தலைவர்கள் என்ன சொல்கிறுர்கள் என்பதை அறிவதற்காக தாங்கள் டில்லி வந்ததாக அறிவித்துள்ளனர். மேற்கு வங்காள நிகழ்ச்சிகள்பற்றிய மத்திய தலைவர்களின் கருத்தை அறியவும் அவர்கள் விரும்புவதாகக் கூறியிருக்கிறுர்கள்.

மேற்கு வங்காளத்தில் 14 கட்சி முன்னணி மந்திரிசபை நீடிப்பதற்கே அபாயத்தை உண்டுபண்ணியிருக்கும் நெருக்கடி நிலைமை நீடித்து வருவதாக அவதானிகள் கூறுகிறுர்கள்.

நெருக்கடியை நீடிப்பதற்கான ஐக்கிய முன்னணியின் முக்கியமான கூட்டம் திங்களன்று நடைபெற்றது. காரசாரமான விவாதம் நடைபெற்றது. நெருக்கடியைத் தீர்ப்பதற்கான வழிதுறைகள்பற்றி உடன்பாடு ஏற்படவில்லை.

வலதுசாரி கம்யூனிஸ்ட் கட்சியும் பார்வர்ட்பிளாக் கட்சியும் சில முக்கியமான பிரச்னைகளை எழுப்பின. அதாவது பொலிசைத் தணிக்கை செய்வதற்கு ஒவ்வொரு தானுவுக்கும் சர்வகட்சி ஆலோசனைக் குழுவை அமைக்க வேண்டும். மிக முக்கியமான விஷயங்கள் அனைத்திலும் இப்போது இருப்பது போல பொதுவான கருத்து ஒருமைப்பாட்டைக் கொண்டு முடிவு செய்யாமல்பெரும்பான்மை ஆதரவைக் கொண்டு முடிவு செய்ய வேண்டும். இந்த முக்கியமான பிரச்னைகளைத் தான் வலதுசாரிக் கம்யூனிஸ்ட்கட்சியும் பார்வர்ட் பிளாக் கட்சியும் எழுப்பின. இந்தப் பிரச்னைகள் மீது செய்யப்படும் முடிவுகளையே ஐக்கிய முன்னணியின் வாழ்வோ அல்லது சாவோ பொறுத்திருக்கிறது.

மார்க்ஸீய கம்யூனிஸ்டுகள் முற்றிலும் வேறுபட்ட கருத்துக்களை கொண்டிருக்கின்றனர்.

மேற்கூறிய பிரச்னைகளைப் பற்றி மிகவும் காரசாரமான வாதம் நடைபெற்றது. மார்க்ஸீய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களான திரு. ஜோதிபாசுவும், திரு. சரோர்ஜ் முக்கர்ஜியும் தமது கட்சியைக் கலந்துகொண்டு, அதன்கருத்தை ஐக்கிய முன்னணியின் அடுத்த கூட்டம் ஜனவரி 30-ந் தேதியன்று நடைபெறும்போது தெரிவிக்க ஒப்புக்கொண்டனர்.

மேற்கூறிய பிரச்னைகளைப் பற்றி மார்க்ஸீய கம்யூனிஸ்ட் கட்சி இறுதியாக எடுத்துக்கொள்ளும் மனப்பான்மையையே எல்லாம் பொறுத்திருக்கின்றது. உதாரணமாக, மேற்கூறிய இரு பிரச்னைகள் மீது உடன்பாடு ஏற்படவேண்டியது மிகவும் அவசியம் என்று பங்களா காங்கிரஸ் கருதுகிறது. அவற்றில் உடன்பாடு ஏற்படாத எந்த நிலையையும் பங்களா காங்கிரஸ் ஏற்றுக்கொள்ளாது.

சில சிறு பிரச்னைகள்மீது உடன்பாடு ஏற்பட்டதும் சிறிது நம்பிக்கை ஏற்பட்டது: ஆனுல் முக்கியமான பிரச்னைகள் மீது உடன்பாடு ஏற்படமுடியவில்லை.

முதல் அமைச்சருக்கு திரு. ஜோதிபாசு எழுதிய கடுமையான கடிதம்பற்றியும் கேள்விகள் கேட்கப்பட்டன. திரு. பாசுவின் கடிதத்தில் அடங்கிய குற்றச்சாட்டுகளுக்கு முதல் அமைச்சர்பதில் தெரிவிக்கவேண்டியது அவசியம் என்றும் கருத்துத் தெரிவிக்கப்பட்டது. ஆனுல் இந்தக் கட்டத்தில் முதல் அமைச்சர் பதில் கூறக் கூடாது என்று யோசனை கூறப்பட்டது.

## புதிய தூதர்

திரு. ஹென்றி டக்ளஸ் வயிட் இலங்கையின் புதிய ஆஸ்திரேலிய தூதராக நியமனம் பெற்றுள்ளார்.

பட்டுள்ள உடன்பாட்டின் கீழ், இலங்கையின் அபிவிருத்திக்கு அத்தியாவசிய தேவையாகக் கருதப்படும் இயந்திர சாதனங்களும், பொருட்களும் இக்கடனுதவியின்கீழ். பிரிட்டனிலிருந்து பெறப்படும். முன்னைய கடனுதவிகள் போன்று இதுவும் வட்டியில்லாக் கடனுதவியாகவே வழங்கப்படுகிறது. மூன்று வருட தவணை விட்டுக் கொடுப்புச் சலுகையுடன் இந்தக் கடனை 25 வருட காலத்தில் திருப்பிக் கொடுக்கலாம். மேலதிகமாக...றது.

அதே சமயம் 1969-ம் ஆண்டு பாரீஸில் நடைபெற்ற உதவியளிப்பு மகாநாட்டில், பிரிட்டன் இலங்கைக்கு அளிப்பதாக வாக்குறுதியளித்த 20 லட்சம் பவுண் (ரூ. 28,000,000) கடனுதவி சம்பந்தமாக இப்பொழுது பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்த 20 லட்ச கடனுதவி, இலங்கை அரசாங்கத்தின் அபிவிருத்தித் திட்டங்களுக்கு முதலீடாகப் பயன்படுத்தப்படும்.

போலந்தில்

# 3 பிரிட்டிஷ் ராஜதந்திரிகளை வெளியேற உத்தரவு

வார்ஸோ, ஜன. 28

வார்ஸோவிலுள்ள பிரிட்டிஷ் ராஜதந்திரிகள் மூவரை நாட்டைவிட்டுவெளியேறும்படி போலந்து அரசாங்கம் உத்தரவிட்டிருக்கின்றது.

இவர்கள் விரும்பத்தகாதவர்கள் என்று அறிவிக்கப்பட்டபோதிலும் இதற்கான காரணங்களை போலந்து அரசாங்கம் அறிவிக்கவில்லை.

கடந்த மாதம் விரும்பத்தகாத நடவடிக்கைகளில் இறங்கியதற்காக போலந்து ராஜதந்திரிகள் மீது பிரிட்டிஷ் அரசாங்கம் எடுத்த நடவடிக்கையொன்றுக்கு எதிர் நடவடிக்கையாகவே இப்பொழுது போலந்து மூன்று பிரிட்டிஷ் ராஜதந்திரிகள் மீது நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று பிரிட்டிஷ் அதிகாரி ஒருவர் கூறினுர்.

## 6 மாதச்சிறை

### எதிரிகள் அப்பீல்

வல்வெட்டித்துறை, புதன்

பொலிகண்டியைச்சேர்ந்த ஐ. புனிதர், தங்கராசா, த. சிவசுப்பிரமணியம் ஆகிய மூவரும் அதே இடத்தைச் சேர்ந்த ஆனந்தமயில் என்பவருடைய வீட்டிற்குள் கடந்த வருடம் ஆவணி மாதம் 18-ந் திகதி அத்துமீறிப் புகுந்து ரூபா 2100 பெறுமதியான மீன்பிடி உபகரணங்களைக் களவாடியதாக வல்வெட்டித்துறைப் பொலிசாரால் குற்றம்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது

விசாரணையின் பின்னர் மாஜிஸ்திரேட் எதிரிகள் மூவரையும் குற்றவாளிகளாகக்கண்டு தலா 6 மாதச் சிறைத்தண்டனைவிதித்தார் எதிரிகள் அப்பீல் செய்வதெனத்தெரிவிக்கவே மாஜிஸ்திரேட் தலா ரூபா 1000 பிணையில் செல்லுமாறு உத்தரவிட்டுள்ளார்.

மா-ஸே-துங்

## சுவரொட்டிகளை ஒட்டியவர்கள் கைது

சென்னை, ஜன. 28

"துப்பாக்கியிலிருந்து அதிகாரம் பிறக்கிறது" என்ற மா-ஸே துங்கின்வாசகங்களடங்கிய துண்டுப் பிரசுரங்களை சென்னையில் உள்ள சுவர்களில் ஒட்டிக் கொண்டிருந்த இரண்டு வாலிபர்களை பொலிசார் கைது செய்துள்ளனர்.

## பஸ் பள்ளத்தில் பாய்ந்தது

### 7பேர் பலி, 31பேர்காயம்

கொடைக்கானல், ஜன. 28

பெங்களூரிலிருந்து சென்று கொண்டிருந்த உல்லாசப் பிரயாணிகள் பஸ் ஒன்று கொடைக்கானல் மலையிலிருந்து பள்ளத்தை நோக்கிப் பாய்ந்து விபத்துக்குள்ளானது. இவ்விபத்தில் ஏழு பேர் மரணமானுர்கள்; 31 பேர் காயமடைந்தார்கள்.

## காமராஜர் கருத்து

சென்னை, ஜன 28

இந்தியாவில் இடைக்கால தேர்தல் ஒன்றை நடத்த வேண்டுமென்றும் இதனுல் நாட்டின் குழப்பங்கள் நீங்கி அமைதியான சூழ்நிலை உருவாகுமென்றும் திரு. காமராஜர் சென்னையில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசும்போது கருத்துத்தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

அஹிம்சை ஒரு மேலான நெறி. அதுதான் சிறந்த அன்பு. அதனுல் மனிதனுடைய உள்ளத்தை மாற்ற முடியும், அது வீரனுடைய ஆயுதம், அது தனக்குத் துன்பத்தை விளைவிப்பதன்றிப் பிறருக்குத் தீங்கு விளைவிப்பதில்லை — மகாத்மாகாந்தி.


# ஈழநாடு

Eelanadu N. tiona: Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49. Jaffna Telephone: 889.

யாழ்ப்பாணம் சௌமிய வருஷம் தைமாதம்
16-ந் திகதி (29- 1 - 70)


## அமைச்சருக்கு வரவேற்பு

உள்ளூராட்சி அமைச்சர் திரு. ஆர். பிரேமதாசா இன்று வடபகுதிக்கு வருகை தருகிறார். அமைச்சராகப் பதவியேற்றபின் இங்கு அவர் வருவது இது இரண்டாவது தடவை சுறுசுறுப்புடன் எந்தக்காரியத்தையும் உடனுக்குடன் செய்பவர்; ஆற்றலுள்ளவர்; உள்ளூராட்சி மன்றங்கள் பற்றியும் சாதாரண பொதுமக்கள் பற்றியும் நன்கறிந்தவர்; எதிர்க்கட்சியினரின் பாராட்டையும் பெற்றவர். இங்கு தங்கியிருக்கும் சில தினங்களுக்குள் பல நிகழ்ச்சிகளிலும் கலந்துகொள்ளவிருக்கிறார். யாழ்ப்பாண மாநகரசபையும் அவருக்குப் பொதுவரவேற்பு அளிக்கவிருக்கிறது. சமீப ஆண்டுகளில் எந்த அமைச்சருக்கும் மாநகரசபை பொது வரவேற்பளிக்கவில்லை. இந்தப் பெருமையும் அமைச்சர் பிரேமதாசாவைச் சாருகிறது. அமைச்சர்களின் வருகையினுல் இப் பகுதி மக்களுக்கும் பயன் கிடைக்கும். மக்களை அறிந்து கொள்வதன் மூலம் அமைச்சர்களுக்கும் அரசாங்கத்துக்கும் பயன் கிடைக்கிறது. மக்களின் ஒத்துழைப்பும் கிடைக்கிறது. உள்ளூராட்சி அமைச்சராகப் பதவிவகிக்கும் திரு பிரேமதாசா அமைச்சராகப் பதவிவகிப்பது இது தான் முதற்தடவை. இந்தப் பதவியேற்ற குறுகிய காலத்தில் நாட்டின் பல பாகங்களுக்கும் சென்று அந்தந்தப் பகுதி மக்களின் குறைநிறைகளை நேரில் அறிந்துகொண்டிருக்கிறார். வடபகுதிக்கு வருகைதந்து சில மாதங்களேயாகின்றன வென்றுலும் இன்று இரண்டாவது தடவையாகவும் இங்கு வருகிறார் அவர் வரவு நல்வரவாகட்டும்.

1956-ம் ஆண்டின் பின் இலங்கை மந்திரிசபையில் தமிழர்கள் அங்கம்வகித்தது மிகமிகக் குறைவு 1965 ம் வருடத்தில் ஒரு தமிழர் மந்திரிசபையில் இடம்பெற்று வடபகுதி மக்களின் குறைநிறைகளை எடுத்துக் கூறி அவர்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு மந்திரிசபையில் தமிழருக்குப் பிரதிநிதித்துவம் இருக்காததுடன் வடபகுதிக்கு அமைச்சர்கள் வருகைதராமலும் இருந்தது. வடபகுதி பலதுறைகளிலும் பின்தங்கியதற்குப் பெரும்பாலும் காரணம் என்று சொல்லலாம். இந்த நிலை இப்போது மாறிவருவதும் மகிழ்ச்சிக்குரியது இது மேலும் நீடிக்கவேண்டும். பொதுத்தேர்தலின் பின் எந்தக் கட்சியினர் ஆட்சியமைத்தாலும் அதில் மக்களுக்குப்போதிய பிரதிநிதித்துவம் கிடைக்கவேண்டும் இதில் பெரும்பான்மை சமூகத்தினர் பெருந்தன்மையுடன் நடந்துகொள்ள வேண்டும். அதேசமயம் சிறுபான்மையினரான தமிழ்மக்களும் கடந்தகால அனுபவங்களைக் கொண்டு இரண்டாந்தரப் பிரஜைகளாகவல்ல, மூன்றுந்தரப் பிரஜைகளாகவும் தமிழ் மக்கள் ஒதுக்கப்படும்நிலைக்கு வந்துகொண்டிருக்கிறார்களென்பதைத் தெளிந்து மந்திரிசபையில் தமிழர்களுக்கு மக்கள் தொகை விகிதாசாரப்படியாவது போதிய பிரதிநிதித்துவம் பெறுவதற்கு, அடுத்த பொதுத்தேர்தலின் பின் ஆட்சிமன்றத்துக்குத் தெரிவு செய்யப்படும் கட்சிகளோ, கட்சியோ, தனிப்பட்ட அங்கத்தவர்களோ தயங்கக் கூடாது; பின்னிற்கக்கூடாது. அமைச்சர்களை இங்கு அழைத்து வரவேற்பு வைத்து, மகஜர்கள் கொடுத்து, குடை, கொடி ஆலவட்டம் பிடித்து இப் பகுதி மக்களின் குறைநிறைகளைத் தெரிவித்து நிவாரணம் தேடுவதற்குப் பதிலாக மந்திரிசபையில் இபபகுதி மக்களின் பிரதிநிதிகள் சிலராவது அங்கம் வகித்தால் சிறிது கூடுதல் பயன் கிடைக்காதா? இப்

# பழ பெருமை வாய்ந்த துன்னலை கோவிற்கடவை பிள்ளையார் கோவில்

துன்னலை கோவிற் கடவைப் பிள்ளையார் ஆலயம் யாழ்ப்பாணத்திலுள்ளசைவ ஆலயங்களில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவற்றில் ஒன்ருகும். யாழ்ப்பாணக் குடாநாடு பண்டைக் காலத்தில் நாகதீபம் என இலங்கைச் சரித்திரத்தில் வழங்கப்பட்டு வந்ததென்பதும் புத்தர் காலத்திலும் அதற்கு முன்பும் மக்கள் அங்கு வசித்தார்களென்பதும் இலங்கை வரலாற்று நூல்களால் அறியக் கிடக்கின்றன. யாழ்ப்பாணக் குடா நாட்டிற்கு கதிரைமலை (கந்தரோடை) சிங்கை நகர் நல்லூர் என்னும் நகரங்கள் முறையே இராசதானிகளாகக் காலத்திற்குக் காலம் விளங்கினவென யாழ்ப்பாணச் சரித்திரம் கூறும்.

எட்டாம் நூற்ருண்டில் கலிங்க தேசத்து அரசனுகிய உக்கிர சிங்கன் கதிரைமலையைக் கவர்ந்து நாகதீபத்திற்கு அரசனுனன் இவனே மாருதப் புரவீகவல்லியென்னும் சோழ இராச குமாரியை மணந்து அவளின் விருப்பத்திற்கிணங்கி மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலைக் கட்டுவித்தவன்.

இவ்வாலயத்திற்கு கோவிற் கடவை என்ற மறுபெயர் உண்டு. உக்கிர சிங்கன் சிறிது காலத்திற்குப் பின் துன்னலைக்கு அணித்தாயுள்ள வல்லிபுரம் என்னும் இடத்தில் ஒரு நகரை அமைத்து அதற்கு சிங்கை நகர் என்னும் பெயரிட்டு அங்கிருந்துநாட்டை ஆண்டு வந்தான்.

அக்காலம் தொடக்கம் கோவிற் கடவை என்று அழைக்கப்பட்டு வந்த மாவிட்டபுரம் கந்த சுவாமி கோவிலுக்கு அணித்தாயுள்ள தெல்லிப்பளை மல்லாகம் ஆகிய கிராமங்களில் உள்ள மக்களிற் சிலர் இங்கு வந்து குடியேறினர்களென அறியக் கிடக்கின்றது. காலப் போக்கில் இத் தொடர்பு வலியுற வ மாவிட்டபுரத்தைச் சேர்ந்த செகராசசேகரத்தின் முதலி இங்கு வந்து குடியேறினர். அவர்களின் புத்திரரில் ஒருவராகிய பொன்னம்பலம் என்பவர் புலோலியிற் சென்று குடியேறினர். அககாலம் தொடக்கம் இவ்விரு கிராமங்களுக்கும் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டு வந்திருக்கின்றது ...



படம் புலோலி நிருபர் நி. கே சூரியமூர்த்தி

**நாளை வெள்ளிக்கிழமை (30-ம் திகதி) நிகழவிருக்கும் கோவிற் கடவைப் பிள்ளையார் ஆலய மின்சார தீப ஆரம்ப விழாவினையும் கோவிற் கடவை பிள்ளையார் வீதி திறப்பு விழாவினையும் ஒட்டி எழுதப்பட்டுள்ளது. அன்று உபசபாநாயகர் திரு. மு. சிவசிதம்பரம் அவர்கள் மின்சார தீபத்தை ஆரம்பித்து வைக்கின்றார். உள்ளூராட்சி அமைச்சர் திரு ஆர் பிரேமதாசா அவர்கள் வீதியைத் திறந்து வைக்கின்றார்.**

சென்று உத்தியோகம் பார்த்த ஆழ்வார்பிள்ளை வல்லிபுரம் அவர்களும் அவர் காலத்தில் ஆலயத்தின் மணியகாரனுக கடமையாற்றிய சின்னையா சின்னத்தம்பி அவர்களும் இப்புதிய சசாப்தத்தை ஏற்படுத்திய பெரியார்களாவார், வல்லிபுரம் அவர்கள் சிங்கப்பூர் சென்று உத்தியோகம் பார்த்தவர் என்பதனுல் 'சிங்கப்பூர்' வல்லிபுரம் என்றும் சின்னத்தம்பி மணியம் அவர்கள் திடகாத்திரமும் உயர்ந்த தோற்றமும் உடையவர் என்பதனுல் 'வீமன்' சின்னத்தம்பி எனவும் பொது மக்களால் அன்பாக அழைக்கப் பட்டனர்.

''சிங்கப்பூர்'' வல்லிபுரத்தின் காலம் ஆலய வரலாற்றில் ஒரு மகத்தான காலமாகும் அவர்களின் தெய்வப் பணி நம்மவர்க்கெல்லாம் ஓர் எடுத்துக்காட்டு. வசந்த மண்டபம் தரிசனமண்டபம் தலைவாசல் சுற்று மதில் போன்ற வேலைகள் இவ்விருவர் காலத்திலேயே நடைபெற்று இருக்கின்றன இவ்வாலயத்தில் மகாசிவராத்திரி தினத்தை ஒட்டி பத்து நாட்கள் திருவிழா நடைபெறும் மகா சிவராத்திரித் தினத்தன்று சுவாமி சாமியன் அரசடி வைரவ கோவிலுக்கு வேட்டைக்குச்செல்ல வேண்டுமென்ற நியதியையும் ஏற்படுத்தியவர் வல்லிபுரம் அவர்களேயாவர். அதற்குரிய குதிரைவாகனத்தையும் மற்றும் உபகரணங்களையும் பெற்றுக் கொடுத்துள்ளார்: அவர் வழித்தோன்றலாகிய தொண்டமனுறு மகாவித்தியாலய அதிபர் நடராசாஅவர்களும் அவர் மைத்துனர் க சந்திரசேகரம் அவர்களும் அவர்களின்நெருங்கிய உறவினர்களும்சிவராத்திரி விழாவினையும் சாமியன் அரசடி வைரவ கோவில் வேட்டை ஒழுங்குகளை காசிநாத வித்தியாலய அதிபர் வ. நடராசா அவர்களும் வருடம் தோறும் சிறப்புற நடத்தி வருவது ஈண்டு குறிப்பிடத்தக்கது.

இக்கிராமத்தின்வளர்ச்சிக்காக அயராதுஉழைத்த பண்டிதர் இ. சின்னையா வல்லிபுரம் மார்ககண்டு முதலியோரின் அரும்முயற்சியினுல் ஆலயத்தோடு சேர்ந்தமடம் ...

**--வ. தங்கராசா--**
அதிபர் வரணி மகாவித்தியாலயம்

ஆசிரியருக்குக் கடிதம்

## விபத்துக்களை தவிர்க்க வீதிப்பாதுகாப்பு இயக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டிலும் நகரிலும்

ஸ்ரீ தியாகராஜ உற்சவம் திருவையாற்றில் ஜாம் ஜாமென்று நடந்துகொண்டிருக்கிறது. கொடுத்து வைத்தவர்கள் இந்த வைபவத்தை கண்டும் கேட்டும் இன்புறுவார்கள், இந்தியாவுக்கு போவதென்றுல் இன்று எத்தனையோ தடைகள் இருக்கின்றன. விஸா தடை, செலாவணிக் கட்டுப்பாடு, பெர்மிட்டுகள், மண்ணுங்கட்டிகள் என்று பலப்பல.

சுமார் முப்பது வருடங்களுக்கு முன்பாகஇருக்கலாம். யாழ்ப்பாணம் ரயில்வே நிலையத்தில்போய் சென்னை எழும்பூருக்கு ஒரு டிக்கட் கொடுங்கள் என்று கேட்டேன். டபாரென்று பதின் மூன்று ரூபாய் சொச்சத்துக்கு ஒரு டிக்கட்டைக் கொடுத்தார்கள். ரயில் பிரயாணம், கப்பல் பிரயாணம் எல்லாவற்றிற்கும் சேர்த்து. இன்றைக்கு அப்படி முடியுமா?

கலாச்சாரத் தடையையும் போட்டுவிட்டது நமது காருண்ய அரசாங்கம்.

திருவையாற்றில் இன்று பார்த்தால் ஒரே இசைக் குழப்பம். காவிரி நதிக்கரையில் பழைய வித்வான்களும் புதிய வித்வான்களும் தம்புராக்களையும், மிருதங்கங்களையும், நாகசுரங்களையும் தலைக்குமேலே தூக்கிக் கொண்டு முண்டியடித்து யார் முதலில் பகவான் சன்னதியில் சங்கீதார்ப்பணம் செய்யவேண்டும் என்று போட்டி போடுவார்கள்.

அப்பப்பா! எத்தனை வித்வான்கள்!

ஜேய், ஜேய் என்று ஒரே சங்கீதக் கோஷ்டிகள்.

தியாகராஜப் பெருமான் திருப்பதியில் பிறந்தவராயினும் தமிழ் வளர்ந்த சோழ நாட்டில் தமது வாழ் நாட்களைக் கழித்தது ஒரு பெரும் அதிசயம். அப்படி என்னத்தைக் கண்டுவிட்டார் திருவையாற்றில்?

திருவையாற்றுக்குப் போனவர்களுக்குத்தான் இந்த இரசியம் தெரியும்.

காவேரி நதி நிர்மலமாக ஓடிக்கொண்டிருக்கிறது இந் நாட்களில் மழை பெய்திருக்கிறபடியால் நடுப்படுக்கையில் சிறிதளவு முத்துப்போல நீர் ஓடிக்கொண்டிருக்கும். இரு கரைகளிலும் வானேங்கி வளர்ந்த பெரிய விருட்சங்கள்.

மாங்கனிச் சோலைகளில் மதுர குயில்கூவும், மந்திக் கூட்டங்கள் மகிழ்ந்தாடிக் குலவும். எங்கும் ஒரே அமைதி, நிசப்தம், சாந்தி.

இந்தவிதமான சூழ்நிலையை தியாகையர் கண்டுபிடித்து அதில் லயப்பட்டதில் ஆச்சரியமொன்றுமில்லை. கற்பனை பொங்கும் அந்தப் பேரெழில் வாய்ந்த பூமியில் அவருக்கு ராம தரிசனம் கிடைத்ததிலும் ஆச்சரியமில்லை. நவ நவமான ரத்னகரக் கீர்த்தனைகளை அள்ளி அள்ளித் தந்தார். அவர் பெயரால் எத்தனை பேர் இன்று பிழைக்கிறார்கள்!

முந்தியநாள் இரவு தியாகராஜ உற்சவத்தைக் கேட்டபோது ஓர் அதிர்ச்சி கிடைத்தது. மதுரை மணி ஐயர் தான் பிழைத்தெழுந்து விட்டாரோ என்ற ஓர் ஐயம். அதே சாரீரம், அதே பாணி, அதே 'லல்லல்லவ்' நிகழ்ச்சி முடிந்ததும் ஸ்ரீவாஞ்சியம் மணி ஐயர் என்று சொன்னார்கள்.

இவரும் மணி ஐயர்!

— வழிப்போக்கன்


**வெஸ்லி சினிமா**
மானிப்பாய்
தினசரி: 6-30, 9-30
பிரிபோயா, போயா 2-30 மணி
எஸ், எஸ். ஆர் - தேவிகா
நடித்த
**மறக்கமுடியுமா?**

**ராஜா** (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
எம். ஜி. ஆர். - ஜெயலலிதா
சோ
நடித்த
**ஒளிவிளக்கு**

**ஸ்ரீ காலிங்கன்**

**REGAL** JAFFNA
Daily 4-45, 7 &9-45, p.m
Poya, Pre poya 4 Shows
Brook Boundy,
Kevin Coughlin
in
THE YOUNG RANAWAYS
(Adults)

**MANOHARA**
JAFFNA
Daily 4-45, 7 & 9-45 p.m
Poya Prepoya 10-30A.M.
Yul Brynner
Rabert Mitchum
in
VILLA RIDES

வல்வெட்டித்துறை
ரஞ்சனா தியேட்டர்

1956-ம் ஆண்டின் பின் இலங்கை மந்திரிசபையில் தமிழர்கள் அங்கம்வகித்தது மிகமிகக் குறைவு 1965 ம வருடத்தில் ஒரு தமிழர் மந்திரிசபையில் இடம்பெற்ருர் அவரும் அந்தப் பதவியில் நீண்டகாலம் இருக்கவில்லை. அதன்பின் மந்திரிசபையில் தமிழர் இடம் பெறவில்லை. சுமார் பதிஞன்கு ஆண்டுகளில் கிட்டத்தட்ட மூன்று வருடங்கள்தான் ஒரு தமிழர் மந்திரிசபையில் அங்கம்வகித்திருக்கிருர் அவரும் நினைத்ததைச் செய்யக்கூடிய நிலையிலிருக்கவில்லை, இந்தப் பதிஞன்கு ஆண்டுகளில். சென்ற சில வருடங்களில் தவிர அதற்கு முன்னைய காலத்தில் அமைச்சர்கள் வடபகுதிக்கு வந்ததில்லை; வந்தாலும் சாவகாசமாக இங்கு தங்கியிருந்து மக்களின் குறைநிறைகளை அறிந்துகொள்ளக்கூடிய நிலையிலுமிருக்கவில்லை.

நிறைகளைத் தெரிந்து நிவாரணம் தேடுவதற்குப் பதிலாக மந்திரிசபையில் இப்பகுதி மக்களின் பிரதிநிதிகள் சிலராவது அங்கம் வகித்தால் சிறிது கூடுதல் பயனுவது கிடைக்காதா? இப்பகுதிக்குவரும் மந்திரிகளை மந்திரிகள் மட்டுமல்ல எவர்தான் வந்தாலும் வரவேற்று உபசரிக்கவேண்டும். வீட்டுக்கு வந்தவர்களை, வருபவர்களை என்னதான் கஷ்டமிருந்தாலும் இன்முகம் காட்டி வரவேற்றுஉபசரிப்பது தான் தமிழன் பண்பு; மனிதப் பண்பு; இதில் தவறக் கூடாது.

இன்றுவரும் உள்ளூராட்சி அமைச்சர் பிரேமதாசாவுக்கு மக்கள் உற்சாகத்துடன் மகிழ்ச்சியானவரவேற்பளிக்க வேண்டும், வடபகுதி மக்களின் உள்ளத்தை அமைச்சர்களும் பெரும்பான்மை சமூகத்தவரும் நன்குபுரிந்து கொள்ளச் செய்வதற்கும் இது நல்ல சந்தர்ப்பம்.

## ''அவசர அறுவடையில் கிழங்கும் வெங்காயமும் பாழாகின்றன''

அராலி, புதன்

''சின்னவெங்காயத்திற்கு சிறப்பிடமாகத் திகழ்ந்து வந்த நமது யாழ்ப்பாணம் இன்று அத் தனித்தன்மையை இழந்து விட்டது வேதனையளிப்பதாகும். இதற்குக் காரணம் நமது விவசாயிகள் வெங்காயத்தை உரிய காலமாகிய மூன்று மாசங்களுக்கு விளைய விடாது அறுவடைசெய்வதே யாகும்.

நன்கு முற்ருத வெங்காயம் வெகு விரைவில் சுருங்கியோ, அழுகியோ விடுகிறது. ஒரு முறை குடாநாட்டு வெங்காயத்தை கொள்வனவு செய்த வியாபாரி, மறுமுறை அதை வாங்கி வியாபாரம் செய்ய மறுக்கிருன் அதே வேலையில் விவசாய அனுபோகம் சற்றுமில்லாத வாலிபர்கள், குடியேற்றப் பிராந்தியங்களில் கிருஷிகப் பகுதியாரின் ஆலோசனையோடு விளைவிக்கும் வெங்காயத்தை விரும்புகிருன் அதற்குக் காரணம் அவர்களது வெங்காயம் தரமாகவிருப்பதே''.

இவ்வாறு யாழ் மாவட்ட விவசாய விசாலிப்பு அதிகாரி திரு பொ மாணிக்கவாசகர் அராலியில் நடைபெற்ற விவசாயிகள் பயிற்சி வகுப்பொன்றில் உரையாற்றும்போது கூறினுர். அவர் மேலும் பேசுகையில் பல ஆயிரம் ரூபா செலவில் வெளிநாடுகளிலிருந்து வருவிக்கப்படும் விதை உருளைக் கிழங்குகள் எமது விவசாயிகளின் அவசர அறுவடையினுல் பாதிக்கப்படுவதாகவும் கூறினுர்.


### நன்றி நவிலல்

24-1-70ல் சிவபதமடைந்த எங்கள் தந்தையார் கனகசபை முத்தையா அவர்களின் இறுதிச் சடங்குகளில் கலந்துகொண்டவர்களுக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும் எமது இருதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேம். மு. இரத்தினசிங்கம், மு. கனகசபை, 6, சுவாமியார் வீதி, சொழும்புத்துறை 28-1-70. 1807

### தேவை

புன்னுலைக்கட்டுவன், குப்பிளான், ஏழாலை, குரும்பசிட்டி, வசாவிளான், கட்டுவன் ஆகிய இடங்களுக்குப் பத்திரிகை விநியோகஞ்செய்யப் பிணைப்பணம் கட்டக்கூடிய, சொந்தமாகச் சைக்கிள் வைத்திருக்கும் பையன் உடன் தேவை. 31-1-70 சனிக்கிழமை காலை 9 மணிக்கும் 11 மணிக்குமிடையில் நேரில் வரவும் பொதுமுகாமையாளர், ஈழநாடு, யாழ்ப்பாணம். 1646



இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு ஜனவரிமாதம் 29ம்திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது


கிய பொன்னம்பலம் என்பவர் புலோலியிற் சென்று குடியேறினுர். அக்காலம் தொடக்கம் இவ்விரு கிராமங்களுக்கும் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டு வந்திருக்கின்றது. துன்னுலைப் பகுதியில் குடியேறிய செகராசசேகர முதலி காட்டுப் புலம் என்னுமிடத்தில் ஆலயமும் அமைத்து மாவிட்டபுரத்து தொடர்பினை நினைவுபடுத்த இவ்வாலயத்துக்கு கோவிற் கடவை என்னும் நாம காரணத்தையும் சூட்டினுன். இதனுல் காட்டுப் புலம் பிள்ளையார் எனவும் கோவிற் கடவைப் பிள்ளையார் எனவும் பெயர் வழங்கி வரலாயிற்று.

### புதுமை மிக்கது

பறங்கியர் ஆட்சிக் காலத்தில் பலசைவ ஆலயங்கள் பறங்கியரால் அழிக்கப்பட்ட போதும் இவ்வாலயம் அவர்கள் கைப்படாது சென்றதற்கு புதுமை மிக்க வரலாற்று நிகழ்ச்சி ஒன்று உண்டு இவர்களுடைய ஆட்சிக் காலத்தில் இவ்வாலயத்தில் ஒரு முல்லை விருட்சம் இருந்திருக்கின்றது. துவக்குடன் வேட்டைக்கு வந்த பறங்கியர் இந்த விருட்சத்தில் ஒரு கொக்கு இருப்பதனைக் கண்டு அதற்கு இலக்குவைத்துச் சுட்டனர். கொக்கு அசையாது விருட்சத்திலேயேஇருந்தது. வந்த பறங்கியர் எல்லோரும் தங்கள் கைத் திறத்தினைக் காட்டப் பலமுறை சுட்டனர் ஆனுல் கொக்கு அசையவில்லை. இதனுல் அவர்களுக்கு ஒருவித மனப்பீதி ஏற்படவே அவ்விடத்தை விட்டகன்றனர். இந்த நிகழ்ச்சிக்குப்பின் இந்த ஆலயத்தின் பக்கம் அவர்கள் தலைகாட்டவே இல்லை. இதனுல் இவ்வாலயத்திற்கு 'கொக்கு அரு முல்லைப் பிள்ளையார்' என்ற காரணப் பெயரும் ஏற்படலாயிற்று. இச்சுவை மிக்க சம்பவத்தை இக்கிராமத்தில் பிரபல சுதேச வைத்தியராகப் பலகாலம் சேவை செய்தும் துன்னலை தெற்கில் சாமியன் அரசடி வைரவ கோயிலைக் கட்டியவருமாகிய அம்பலவர் ஆழ்வாப்பிள்ளை (பூசாரி அப்பா) அவர்கள் உணர்ச்சியோடு பல தடவைகள் கூறக்கேட்டிருக்கிறேன்.

செகராச சேகரரத்தின் முதலி காலத்திற்குப் பின் குமார் சந்திரவர் என்னும் பெரியாரும் அவர் வழித் தோன்றல்களும் ஆலய வளர்ச்சிக்காக பெரும் தொண்டாற்றி இருக்கின்றுர்கள். இந் நூற்றுண்டின் முற்பகுதியிலிருந்து இவ்வாலய வளர்ச்சியில் ஓர் புதிய சகாப்தம் ஏற்பட்டது. சிங்கப்பூர்

இக்கிராமத்தின்வளர்ச்சிக்காக அயராதுஉழைத்த பண்டிதர் இ. சின்னையா வல்லிபுரம் மார்க்கண்டு முதலியோரின் அரும்முயற்சியினுல் ஆலயத்தோடு சேர்ந்தமடம் கட்டுவிக்கப்பட்டது. வல்லியார் கிட்டினபிள்ளை அவர்களின் அளப்பரிய சேவையும் ஈண்டு போற்றத்தக்கது. அண்மைக்காலத்தில்சங்கரப்பிள்ளை சுப்பையா, இராமலிங்கம் வேலுப்பிள்ளை, கணபதிப்பிள்ளை தாமோதரம் பிள்ளை போன்றவர்களின் முயற்சியாலும் ஆலயமணியகாரனுகக் கடமையாற்றுகின்ற வல்லியார் சந்திரசேகரத்தின் ஊக்கத்திஞலும் குறிப்பிடத்தக்க திருப்பணி வேலைகள் நடைபெற்றுள்ளன.

பொதுச் சேவையில் ஈடுபாடுடைய கார்த்திகேசு ஐயா ஆறுமுகம் ஐயா அவர்கள் தற்பொழுது ஆலய அர்ச்சகராகப் பணிபுரிந்து வருகின்றுர்கள் கோவிற் கடவை கிராம முன்னேற்றச்சங்கத்தின் அரும் முயற்சியினுல் ஆலய மின்சாரஆரம்பவிழாவும் ஆலய வீதி திறப்புவிழாவும்நடைபெறுவதற்குஇருக்கின்றன. ஆலய வரலாற்றிலே இந்நாள் ஒரு பொன்னாளாகும்.

ஆசிரியருக்குக் கடிதம்

## விபத்துக்களை தவிர்க்க வீதிப்பாதுகாப்பு இயக்கம்

முன்னெப்பொழுதுமில்லாதவாறு கடந்த வருடம் வீதி விபத்துக்கள் கூடியுள்ளதாகப் பொலிஸ் தலைமைக் காரியாலயம் அறிவித்திருக்கிறது. 16,000க்கு மேற்பட்ட விபத்துக்கள் ஏற்பட்டுள்ளன எனவும் இதில் சிக்கியவர்களில் 654 பேர் மரணமாகியுள்ளனர் எனவும் பொலிஸ் தலைமைக்காரியாலய புள்ளி விவரங்கள் தெளிவாக எடுத்துக்காட்டியுள்ளன. அதிக விபத்துக்கள் தலைநகரிலேயே சம்பவித்துள்ளதாகவும் பொலிஸ் தலைமைக்காரியாலயம் தெரிவிக்கிறது.

இவ்வாறு தினமும் அதிகரித்துக்கொண்டுவரும் இவ் விபத்துக்களைப் பார்த்துக் கொண்டு மக்களும் பொலிசாரும் வாழாவிருக்கக் கூடாது. வீதிப் பாதுகாப்பில் பொதுமக்களும் பொலிசாரும் ஒத்துழைத்தால் இவ்வருடம் நிச்சயமாக விபத்துக்களின் தொகை குறையலாம்.

வீதி பாதுகாப்பு விதிகள், விதிகளென்ற அளவிலேயே மக்கள் வைத்திருக்கிருர்களன்றி அதைச் செயற்படுத்துவதில்லை. இதனுல்தான் அதிக விபத்துக்கள் ஏற்படக் காரணமாகிறது.

பஸ் பிரயாணிகளில் சிலர் பஸ் தரிப்புகள் வருமுன்னர் அதாவது பஸ் நிற்குமுன்னரே இறங்குகின்றனர். இவ்வாறு ஓடிக்கொண்டிருக்கும் பஸ்ஸிலிருந்து இறங்க முயற்சிக்கும் போது விபத்து ஏற்படுகிறது. அடுத்துப் பாடசாலைகளின் முன்னுல் காலையிலும் மாலையிலும் கார்களை அதிகமாக நிற்பாட்டிவைப்பதால் போக்குவரத்திற்குக் கஷ்டமாகிப் போக்குவரத்துத் தடைப்படுகிறது. பஸ்களுக்கும் மாணவர்களுக்கும் கார்களுக்குமிடையில் ஊடுருவிச்செல்ல இயலாமலிருக்கிறது இத்தகைய நெருக்கடியான நிலைமையிலும் அதிக விபத்துக்கள் ஏற்படுகின்றன.

போக்குவரத்து விதிமுறைகளை அனுசரிக்காமல் பொதுமக்கள் குறிப்பாகப் பாடசாலை மாணவர்கள் வீதிகளில் தவருன பக்கத்தில் நடந்துசெல்வதாலும், கூட்டம் கூட்டமாக வீதி முழுவதையும் ஆக்கிரமித்துக் கொண்டு செல்வதாலும் பழுதான வாகனப் போக்குவரத்தாலும் வீதி விபத்துக்கள் அதிகம் சம்பவிக்கின்றன

எனவே வீதிப் பாதுகாப்பைப் பேணி விபத்துக்களைக் குறைப்பதற்குக் கடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

O போக்குவரத்துக்குத் தடையாகவுள்ளவர்கள் மீது பொலிசார் கடும் நடவடிக்கையெடுக்கவேண்டும்.

O வாகனங்களை உபயோகிப்பவர்களுக்கு 'லைசென்ஸ்' வழங்குவதில் கடும் விதிகளை மேற்கொள்ளவேண்டும். பழைய லைசென்ஸ்களை முறைக்கு முறை புதுப்பிக்கும் அதேவேளையில் வாகனங்கள் வீதிப்பாவனைக்குத் தகுதியானவைகளா என்பதனையும் முக்கியமாகப் பொலிஸ் பகுதி கவனிக்கத் தவறக்கூடாது

O வீதிகளில் செல்லும் போது கடவைகளில் அதாவது கடந்து செல்வதற்கெனக் குறிக்கப்பட்டுள்ள இடங்களில் மிகநெருக்கடியான சமயத்தில் வீதியைக் கடவாது மற்ற இடங்களில் கடந்துசென்று வாகனப் போக்குவரத்திற்கு இடையூறு விளைவிப்பவர்களைப் பொலிஸார் கவனித்துத் தண்டிக்கவேண்டும்.

O நாட்டிலுள்ள பெரிய பாடசாலைகளிலுள்ள உயர் வகுப்பு மாணவர்களுக்கு வீதிப்பாதுகாப்பு முறைகளில் நன்கு பயிற்சியளித்து பாடசாலை மாணவர்கள் வரும் காலைவேளையிலும் வீடு திரும்பும் மாலை நேரத்திலும் பாடசாலைக்குமுன்னுள்ள வீதிகளில் அவர்களை நிறுத்தி வீதி பாதுகாப்பை நிறுவச்செய்யலாம். இதற்கு ஆசிரியர்களும் ஒத்துழைத்து ஒவ்வொரு பாடசாலையிலும் வீதிப் பாதுகாப்பு இயக்கம் ஒன்றை ஏற்படுத்த வேண்டும். மேலும் பொலிசார் நகரங்களில்மட்டுமன்றிக் கிராமப்புறங்களிலும் வீதிப் பாதுகாப்பு விதிகளைக் கிராமிய மக்களுக்குச் செயல்படுத்திக்காட்ட வேண்டும். வீதிப்பாதுகாப்பு விதிகளை அடிக்கடி இவ்வாறு பொதுமக்களுக்கு ஞாபகமூட்டுவதன் மூலம் வீதிவிபத்துக்களைக் குறிப்பிட்டளவு குறைக்கலாம், வீதிப்பாதுகாப்பு இயக்கங்களும் விபத்துக்களைத் தடுக்கச் சிறந்த கருவிகளாகலாம்.

யாழ்ப்பாணம் கே ஜி


இருபது ஆண்டுகளுக்குப் பின்னர் வின்ஸர் ஸ்தாபனத்தார் உங்களுக்கென்றே இந்தியாவிலிருந்து வரவழைத்து அளிக்கும் ஓர் இனிய இசைத்தமிழ் சித்திரம்.

வின்ஸர் யாழ்ப்பாணம்

தினசரி 4 காட்சிகள்

கே. பி சுந்தராம்பாள் - ஜெமினிகணேசன்

எம். கே. ராதா - பாலாஜி

மற்றும் பலர் நடித்த

ஔவையார்

(புதிய கொப்பி)

பார்க்கத் தவறியவர்களுக்கோர் அரிய சந்தர்ப்பம்!

பாடசாலைப் பிள்ளைகளுக்கு விசேஷ சலுகைகள் செய்யப்படும்.

மனேஜருடன் தொடர்புகொள்ளவும். போன்: 466

சோ நடித்த

ஒளிவிளக்கு

ஸ்ரீ காலிங்கன்

இணுவில்

தினசரி 6-30 9-30

பிறிப்போயா, போயா 2-30 மணி

எம்.ஜி.ஆர்.-தேவிகா-வீரப்பா நடித்த

ஆனந்த ஜோதி

Yul Brynner
Rabert Mitchum
in
VILLA RIDES

வல்வெட்டித்துறை

றஞ்சனு தியேட்டர்

தினசரி: 6-30, 9-30

எம்.ஜி.ஆர். - அஞ்சலிதேவி நடித்த

மர்மயோகி

4-30க்கு மட்டும்

HELICOPTER SPIES

ராணி (யாழ்ப்பாணம்) (தினசரி 3 காட்சிகள்)

எம். ஜி. ஆர். - ஜெயலலிதா அசோகன் - சோ - சந்திரபாபு நடித்த

அடிமைப் பெண்

வெலிங்டன் யாழ்ப்பாணம்

தினசரி பி ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி பிரிபோயா, போயா 4 காட்சிகள்

பாரத ஜனுதிபதியின் தங்கப்பதக்கம் பரிசுபெற்று அகில உலகத் திரைப்பட விழாக்களில் பரிசில்கள் பாராட்டுகள் பெற்ற மலையாளச் சமூகச் சித்திரம்



இரு இளம் உள்ளங்களின் உணர்ச்சிகளைப் பிரதிபலிக்கும் உன்னத சித்திரம்

சத்யன் ஷீலா நடித்த

செம்மீன்

(ஈஸ்ட்மன் கலர்)

இசை: சலீல்சௌத்திரி



கெப்பிட்டல் (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) வெம்பிளி (கண்டி)

4-ந் திகதி ஆரம்பம்

வெலிங்டன் யாழ்ப்பாணம்

★ சிவாஜி ★ பத்மினி

மற்றும் பலர் நடித்த

தில்லானு மோகனும்பாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org